★ விலைரூபா 1-25

# ஈழநாடு
THE EELANADU

(1958 — வெள்ளி விழா ஆண்டு — 1983)

மலர் 25 புரட்டாதி 28 முஹறம் 7 இதழ் 243

யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 14-10-83

## கூட்டணிக்கு தீவிரவாதிகள் தொடர்பில்லை"

### பி. பி. ஸி.க்கு 'அமிர்' பேட்டி

(லண்டன்)

தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும் தமிழ்த் தீவிரவாதிகளுக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லையென்று கூட்டணியின் செயலதிபர் திரு. அ. அமிர்தலிங்கம் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.

பி. பி. ஸிக்கு அளித்த பேட்டியொன்றில் இவ்வாறு மறுப்புத் தெரிவித்துள்ள திரு. அமிர்தலிங்கம், தீவிரவாதிகளுக்கும் எமக்கும் தொடர்பு இல்லை என்பதை இலங்கை அரசு ஏற்றுக்கொண்டதாலேயே எங்களுடன் பேச்சு வார்த்தை நடத்தியதாகவும் தெரிவித்தார்.

(8-ம் பக்கம் பார்க்க)

## கைதான இளைஞரிடமிருந்த 'அமிரி'ன் மகன் எழுதிய கடிதம்!

(கொழும்பு)

எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கத்தின் இளைய மகன் திரு. பகீதரனால் எழுதப்பட்டதாகக் கூறப்படும் கடிதம் ஒன்றை மன்னாரில் தமிழ் இளைஞர் ஒருவரிடமிருந்து இராணுவத்தினர் கைப்பற்றியுள்ளதுடன், அந்த வாலிப

(8-ம் பக்கம் பார்க்க)

## யாழ். பிரதம தபால் நிலையத்தில்

# ரூ. 3 லட்சம் கொள்ளை!

### ஓய்வூதியம் பெறுவோர் பாதிப்பு

(ஏ. வி. மாணிக்கம்)

யாழ்ப்பாணம் பிரதம தபால்நிலையத்தில் நேற்று அதிகாலை நடைபெற்ற கொள்ளை காரணமாக, யாழ். மாவட்டத்தில் ஓய்வூதியம் வழங்குவது நேற்றுத்தடைப்பட்டது. யாழ். மாவட்டத் தபால்நிலையங்களுக்கு அனுப்பப்படுவதற்குத் தயார் நிலையிலிருந்த பென்சன் பணப் பொதிகள் கொள்ளையர் கைவரிசைக்கிலக்கானதைத் தொடர்ந்து இந் நிலை ஏற்பட்டது.

யாழ் பிரதம தபாலகத்தில் இரண்டு லட்சத்து 90 ஆயிரத்து 160 ரூபா 46 சதம் கொண்ட பணப் பொதிகள் நேற்று அதிகாலை 4 மணியளவில் முகமூடி அணிந்த துப்பாக்கி நபர்களால் கொள்ளையடிக்கப்பட்டது.

அத்துடன் மூன்று டெலிபோன்களையும் கொள்ளையர்கள் எடுத்துச்சென்றுள்ளனர்.

இக்கொள்ளைச்சம்பவத்தினால் யாழ் மாவட்டத்தில் ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு நேற்று உரிய பணம் வழங்கப்படவில்லை.

இக்கொள்ளைச்சம்பவத்தைத்

(8-ம் பக்கம் பார்க்க)

## தொண்டமான் எம். ஜி. ஆர். சந்திப்பு

(சென்னை)

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் அமைச்சர் திரு. எஸ். தொண்டமான் தமிழக முதலமைச்சர் திரு. எம். ஜி. இராமச்சந்திரனை நேற்று சந்தித்து இலங்கைச் சம்பவங்

[8ம் பக்கம் பார்க்க]

### சுவரொட்டிகள் ஒட்டிய

## பல்கலைக்கழக மாணவர் இருவர் கைது

(யாழ்ப்பாணம்)

சுவரொட்டிகள் ஒட்டிக்கொண்டிருந்த இரு பல்கலைக்கழக மாணவர்கள் ஆயுதப் படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கந்தர்மடத்தைச் சேர்ந்த ஆதித்தன், கோப்பாயைச் சேர்ந்த எஸ். யோகராசா ஆகிய இருவருமே கைதுசெய்யப்பட்டவர்களாவர்.

நேற்று நண்பகல் சுண்டிக்குளி சந்தியில் வைத்தே இவர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

இவர்களிருவரும் பேராதனைப்பல்கலைக்கழக விஞ்ஞான பீட மாணவர்கள் என்றும்,

8ம் பக்கம் பார்க்க)

### மட்டக்களப்பு சிறையிலிருந்து

## தப்பிய கைதிகளில் இருவர் திருமலையில் கைது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு சிறைச்சாலையிலிருந்து தப்பிச் சென்ற கைதிகளில் இருவர், நேற்று முன்தினம் திருகோணமலையில் கைதுசெய்யப்பட்டனர்.

கைதுசெய்யப்பட்ட இந்த இருவரும்பயங்கரவாத தடைச் சட்டத்தின்கீழ் கைதுசெய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டிருந்தவர்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

மஞ்சத்தொடுவாய் கொள்ளை தொடர்பாக பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு மட்டுநகர் சிறையில் வைக்கப்பட்டிருந்தபோது சிறையிலிருந்து தப்பிச்சென்ற சின்னத்துரை சிவலிங்கம், ஆறுமுகம் செல்வகணேசன் ஆகிய இருவருமே கைது செய்யப்பட்டவர்களாவர்

திருமலையிலுள்ள வீடு ஒன்றில் வைத்து இவர்களை கைது செய்த ஆயுதப் படையினர் இவர்களிடமிருந்து துப்பாக்கி ஒன்றையும் மீட்டனர். இத்துப்பாக்கி தம்பிலுவில் மக்கள் வங்கி கிளையிலிருந்து கொள்ளையடிக்கப்பட்ட துப்பாக்கிகளில் ஒன்று என்று பொலிசார் சந்தேகிக்கின்றனர். (ரு)

## சொத்துக்களைப் பறிகொடுத்து; உடைமைகளை இழந்து

## ஆடிக்கலவரத்தின்போது அகதியான இளம்பெண் தீக்குளித்தார்!

(யாழ்ப்பாணம்)

ஆடிக் கலவரத்தின் போது வெள்ளவத்தையில் உடைமைகளை இழந்து சொத்துக்களைப் பறிகொடுத்து அகதியாக யாழ்ப்பாணம் வந்து உறவினர் வீட்டில் தங்கியிருந்த இளம் பெண் நேற்று நள்ளிரவு தீக்குளித்து மரணமானார்.

யாழ்ப்பாணம் நல்லூரைச் சேர்ந்த 23 வயதான கி. மாலதி என்பவரே மரணமான பெண் ஆவர். மரண விசாரணையில் மேற்கண்ட தகவல் தெரியவந்தது.

யாழ். மரணவிசாரணை அதிகாரி திரு. எஸ். எஸ். பிரான்சிஸ் நேற்றுக் காலை யாழ். நீதிமன்றத்தில் மரண விசாரணை நடத்தினர்

மாலதியின் சடலம் முற்றாக எரிந்து கருகிய நிலையில் வீட்டு மலகூடத்திலிருந்து மீட்கப்பட்டது.

இறந்தவரின் தாயார் சாட்சியமளிக்கையில் கூறியதாவது: ''இறந்தவர் எனது மூத்த மகள். கடந்த வருடம் நவம்பர் 12ம் திகதி அவருக்குத் திருமணப் பதிவு நடைபெற்றது. அவரது கணவர் ஓமானில்பணியாற்றிவருகிறார்.

''கடந்த ஆடி மாதக் கலவரத்தின்போது வெள்ளவத்தையில் இருந்தோம். கலவரத்தின் போது காடையர்கள் வீட்டிற்குள் புகுந்து கத்தியைக் காட்டிப் பயமுறுத்திச் சொத்துக்களை முற்றாகச் சூறையாடினர்

(8ம் பக்கம் பார்க்க)

## கோஷ்டி மோதலில் ஒருவர் பலி!

(வேலணை)

மண்கும்பானில் இரு கோஷ்டிகளுக்கிடையில் ஏற்பட்டமோதலில் ஒருவர் பலியானார் மற்றவர் காயமடைந்தார்.

இச்சம்பவத்தின் போது பொலிசார் துப்பாக்கிப்பிரயோகம் செய்தபோது இன்னொருவரும் காயமடைந்தார்.

மண்கும்பானில் இரு கோஷ்டிகளுக்கிடையே ஏற்பட்ட மோதலைத் தொடர்ந்து ஒரு கோஷ்டி ஊர்காவற்றுறை பொலிஸிற்குச் சென்று புகார் செய்ததாகவும், பின்னர் பொலிசாருடன் அவர்கள் மண்கும்பான் வந்தபோது வழியில் காரைமறித்த மற்றுமொரு கோஷ்டி தாக்குதலில் ஈடுபட்டதாகவும் கூறப்படுகிறது.

இச் சம்பவத்தின்போது க. மாணிக்கவாசகர் தாக்கப்பட்டு மரணமானார். கார்ச்சாரதி செல்லையா சிவலிங்கமும் படுகாயமடைந்தார். காரில் வந்த பொலிஸார் அக்கோஷ்டியினர்மீது துப்பாக்கி பிரயோகம் செய்ததாகக் கூறப்படுகிறது.

பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்தபோது கைலைநாதன் என்பவர் காயமடைந்தார். காயமடைந்த இருவ

[8ம் பக்கம் பார்க்க]

(1) ரத்தக்கண்ணீர்

(2) பகடைபன்னிரண்டு

வீடியோ படங்கள் வெளியிடுபவர்கள்

விக்ரர் அன் சன்ஸ்

100, ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம்.

இன்றே தொடர்பு கொள்ளுங்கள்

தொலைபேசி: 23346

(9282)

இசை வகுப்புகள்

வருகிற விஜயதசமி தினத்தன்று (16-10-83) தமிழ்நாடு இசைக் கல்லூரியின் சங்கீதவித்துவான் பட்டம் பெற்ற செல்வி ஆனந்தி சண்முகநாதன் அவர்களால் எல்லாத் தரத்தினருக்கும் சங்கீதவகுப்புகள் நடாத்தப்பெறும். விரும்புவோர் 15-10-83 க்குமுன் தொடர்பு கொள்ளவும்.

செல்வி. ஆனந்தி சண்முகநாதன்

91/10, இந்துமகளிர்கல்லூரி ஒழுங்கை,

கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

9297

செல்வ, வீர, வித்யா இலட்சுமி கடாட்சம் பெற நவராத்திரி தினங்களில்

பணவைப்பிடு செய்வோர்க்கு 36% அதிக வட்டியை தமிழர் நிதியம் சலுகையாக மாதாந்தமும் வழங்கவுள்ளது

140, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

(தொலைபேசி: 22437

# வரி விளம்பரம்

## தேவை

காவலாளர்கள் இருவர் தேவை (குடியிருப்பு வசதி உண்டு) தகுந்த நற்சாட்சிப்பத்திரங்களுடன் 22.10.83 க்கு முன் விண்ணப்பிக்கவும். விமல் அலுமினியம் லிமிட்டட், அல்லைப்பிட்டி. 9283

மணமகன் தேவை இந்து வேளாளகுல, அழகும் 20 வயதும் நிறைந்த பெண்ணுக்கு எஞ்ஜினியர் அக்கவுண்டன் போன்ற உயர்தராதரம் பெற்றவரன் தேவை. அவுஸ்திரேலியாவில் குடிபதியாகும் வாய்ப்பும் 25,000 டொலர் சீதனமும் கொடுக்கப்படும். முதல் கடிதத்தில் ஜாதகத்துடன் முழுவிபரமும் தரவும். விளம்பர இல. 9263 மே/பா ஈழநாடு யாழ்ப்பாணம். 9263

18-30வயதுக்கிடைப்பட்ட ஆங்கில ஆசிரியர் (பெண்) தேவை. 30, சுவாட்ஸ் ஒழுங்கை. சுண்டிக்குளி ஆசீர்வாதம் அச்சகத்திற்கு அருகாமையில் உள்ள ஒழுங்கை. 9217

எவ்வகை இனங்களாயினும் மூன்று ருத்தலுக்கு மேற்பட்ட கோழிகள் தேவை. நேரில் வந்து பெற்றுக்கொள்வோம். விலை ருத்தல் 11 ரூபா முதல் 13 ரூபாவரை. ஹோட்டல் பரடைஸ், 91, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 23131. (9214)

தமிழ் ஆங்கில தட்டச்சுத் தேர்ச்சியும், போதிய ஆங்கில அறிவுமுடைய பெண் எழுதுவினைஞர் தேவை. கல்வித் தகைமை, பிறந்ததிகதி முன் அனுபவம், எதிர்பார்க்கும் சம்பளம் ஆகிய விபரங்களுடன் விண்ணப்பிக்கவும் விளம்பர இல. 9250 C/o ஈழநாடு த. பெ. எண் 49, யாழ்ப்பாணம். 9250

## விற்பனைக்கு

Ford Cortina Car நல்ல பார்வையிலும் பாவனைக்கேற்ற நிலையிலும் விற்பனைக்குண்டு. பார்வையிடும் இடம் செ.யோகலிங்கம்,வட்டுகிழக்கு சித்தங்கேணி (இந்துக்கல்லூரிக்கு அருகாமையில்). 9225

மண்கும்பான் கிழக்கில் 230 நெற்பரப்பு வெறுங்காணி யாழ்ப்பாணம் - ஊர்காவற்றுறை றோட்டருகில் விற்பனைக்குண்டு. தென்னந்தோட்டம் அல்லது வயல் செய்வதற்கு உகந்தது (யாழ்ப்பாணம் டவுனிலிருந்து 5 மைல் தொலைவில் உள்ளது.) அத்துடன் மண்கும்பான் கிழக்கு சிவகாமியம்மன் கோவிலடியில் 5¼பரப்பு குடியிருப்பு காணி விற்பனைக்குண்டு. றோட்டருகில் மின்சார வசதியும் உண்டு. விபரங்களுக்கு;- 3/9, பிரப்பங்குளம் லேன், வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். 9276

திக்கம் வாசிகசாலைக்கு அருகாமையில் வீடுகட்டுவதற்கும் தோட்டம் செய்வதற்கும் ஏற்ற மூன்றரைப்பரப்பு நிலம் (சந்திரமணியன் தோட்டம்) விற்பனைக்குண்டு தொடர்பு- திருமதி R. சிவபாதம் C/o திருமதி சி. சிவபாதசுந்தரம், சிவனருள் பன்னையம்பதி, புலோலி கிழக்கு, பருத்தித்துறை. 9189

## பயிற்சி

4மாத பொது விவசாயப் பயிற்சி 17-25 வயதுடைய இருபாலாரும் 30-10-83 முன் விண்ணப்பிக்கலாம். சிறுஊதியமும ஆண்களுக்கு விடுதி வசதியும் வழங்கப்படும். அதிபர் யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய நிறுவனம், மருதனுமடம, சுன்னாகம். 9275

## சோதிடம்

மகாதேவா ஜோதிடம் அதிஷ்ட எண்-பெயர் மாற்றம் ஜனனக்குறிப்பு இழந்தவர்கள் தொடர்பு கொள்ளவும் மகாதேவா 140 செல்லர் வீதி, நல்லூர் (கல்வியங்காட்டுச்சந்தைக்குசமீபத்தில்) யாழ்ப்பாணம். 9260

## கல்வி

G. C. E (O/L), G. C. E. (A/L), கலை, விஞ்ஞானம், வாத்தகம்1984, 1985; Typing, Shorthand, 1984 Pitman Exam London; G S. Q (Bio), B. Sc (Bio) 1984, 1985 பாலர் பயிற்சி ஆசிரியர் வகுப்பு Montessori Diploma Teacher's Training Course) 1984; 3-11-1983 ஆரம்பமாகின்றது. 30-10-83ற்கு முன் விண்ணப்பிக்கவும். வசதி குறைந்தவர்களுக்கு சில சலுகைகள் கொடுக்கப்படும். இக்கல்லூரி கல்வித்திணைக்களத்தால் விஞ்ஞான ஆய்வுகூடம் உட்பட அங்கீகரிக்கப்பட்ட சிரேஷ்ட பாடசாலையாகும். விபரங்களுக்கு; அதிபர், உயர்கலைக் கல்லூரி, 73, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். 9278

## WANTED

Medical Officer/RMP for practice at Vavuniya. Apply with bio-data. Advt. 9272' c/o Elanadu, Jaffna. 9272

### சுன்னாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் சுன்னாகம் (வரையறுள்ளது)

### அறிவித்தல்

சுன்னாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில்பின் வரும் விபரப்படி வெற்றுச் சாக்குகளும், கழிவு சீனி, கழிவு மாவும், குறுணல் அரிசியும், வெற்று பரல்களும் கேள்விப்பத்திரமூலம் விற்பனைக்கிருக்கின்றன.

வெற்றுச்சாக்குகளுக்கு ரூபா 250/-உம், ஏனையவற்றிற்கு ரூபா 50/-உம் மீளளிப்பு வைப்புப்பணமாகச் சங்கத்தில் செலுத்திச் சங்க வேலை நாட்களில் கேள்விப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

முடிவு திகதி: 20-10-83 வியாழக்கிழமை நண்பகல் 12-00 மணிவரையும்.

### சாக்குகளின் விபரங்கள்

| | | | |
|---|---|---|---|
| 1. | சீனி பெரிய வெற்றுச் சாக்கு | | 817 |
| 2. | 2½ புசல் அரிசி | ,, | 317 |
| 3. | மா பிறிமா | ,, | 499 |
| 4. | நவதானியம் | ,, | 261 |
| 5. | கழிவு | ,, | 300 |
| 6. | சீனி சிறிய | ,, | 578 |
| 7. | அரிசி சிறிய | ,, | 16 0 |
| 8. | பை. | ,, | 190 |
| 9. | கற்கண்டு குட்டி | ,, | 38 |
| | | | 4610 |

பொதுமுகாமையாளர்

13-10-1983. (9288)

## வகுப்புகள்

விஜயதசமியன்று(16-10 83) புதிய வகுப்புகள் ஆரம்பம். Diploma in Draughtsmanship (சனி, ஞாயிறு வகுப்புகள் 7 மாத காலம்) மற்றும் C. E. I. Part 1, City and Guilds (Telecomm and Electricals) (மேலதிக விபரங்கள் நேரில், JASE Institutes, 21/6, வேம்படிவீதி, (றிம்மர் மண்டபம்) யாழ்ப்பாணம். 9196

## WANTED

Jaffna Firm Requires: Technicians to handle Servicing and Repairs to Photocopying Machines, Electronic Calculators and Typewriters. Workers experienced in manufacture of Steel Cupboards, Cabinets, Iron Safes and other allied equipments furniture. Trainee Technician with G C. E. qualification with apptitude in Electronics Selected persons will have to pay Cash Security and enter into Bond before training given by Principals in Colombo. Trainee Sales / Office Clerks with good knowledge of English Typing preferable. Starting salary Rs: 300-00. Apply in own handwriting, stating experience with testimonials to 484, Hospital Road, Jaffna. 9289

### பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்

மயிலிட்டி வடக்கைச் சேர்ந்த காலஞ்சென்றவரின் ஜன்னப்பு கதிரேசு என்பவரின் மரணசாதன மற்ற மரணச்சொத்துக்களினதும் உடமைப் பொருள்களினதும் விடயத்தில்

மரணமெய்தியவர்

1. சரவணமுத்து அருணாசலமும்
2. பெண் நவமணிதேவியும். இருவரும் மயிலிட்டி வடக்கு

மனுதாரர்கள்

மரண சாதன நியாயாதிக்கம் } ரி/156

எதிராக

சின்னப்பு கதிரேசு சைம் பெண் தங்கரத்தினம் மயிலிட்டி வடக்கு, காங்கேசன்துறை.

எதிர்வாதிகள்

மேலேயுள்ள இலக்கம் கொண்ட மரணசாதனவழக்கு மேலே பெயர் குறிப்பிட்ட இறந்துபோனவரின் மரணசொத்தை நிரூபிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1983ம் ஆணடு நவமபர் மாதம் 9ந் திகதி முற்பகல் 8-30 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுன கட்டளையாக்கப்படலாகாது என்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றனர்.

1983ம் ஆண்டு அக்டோபர் மாதம் 10ந் திகதி.

நீதிமன்றக்கட்டளைப்படி

ஆழ்வார் சிவபாதசுந்தரம்
பதிவாளர்.

தயாரித்தவர்:
மு. யோககுமார்
மனுதாரர்களின் சட்டத்தரணி
9279

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

## விற்பனைக்கு

பின்வரும் மோட்டார் வாகனங்கள்விற்பனைக்குண்டு. இதனைக் கொள்வனவு செய்ய விரும்புவோர் வாகனங்களின் விபரம்அறிவதாகில் 23-10-83க்கு முன்பு காலை 9-00 மணி தொடக்கம் மாலை 5-00 மணி வரை கீழ்க் காணும் முகவரியுடன் தொடர்பு கொண்டு பார்வையிட்டு தாங்கள் கொள்வனவு செய்ய விரும்பும் பெறுமதியை எழுத்து மூலம் அறியத்தரவும்.

1. மினிமொக் (Minimoc) — 5 சிறி 4427
2. கயாஸ் (Hiace) — 34 சிறி 952
3. ட்ரெயிலர் பெட்டி (Trailer) — 44 சிறி 4026

பொதுமுகாமையாளர்,
**சீ-நோர் அபிவிருத்தி நிறுவனம்,**
குருநகர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல; 23604 (9273)

## Al Nada Enterprises Private (Ltd)

These who are under the age of 45 desirous of being considered for registration of employment in the middle east, please contact at 354/9 PT.PEDRO ROAD, ANAIPANTHY, JAFFNA between 4-30 p.m. and 7-30 p.m. on Sunday and Monday (16 and 17-10-83.

No fee will be levied for this registration.

CATEGORIES

DOCTORS, ENGINEERS, ACCOUNTANTS, TECHNICIANS, NURSES, STENOGRAPHERS (ENGLISH)

Labour Licence 363. (9274)

## விம்ஸ் இசைக்கல்லூரி,

யாழ்ப்பாணம்.

புதிய வகுப்புக்கள் ஆரம்பம்: 16-10-83
காலை 10 மணி

★ வீணை ★ மிருதங்கம் ★ வயலின்
★ வாய்ப்பாட்டு ★ பண்ணிசை ★ நடனம்
★ ACCORDIAN ★ GUITAR

பயிற்றுநர்:
அனுபவம் வாய்ந்த இந்திய, இலங்கைப் பட்டதாரி ஆசிரியர் (வானொலிக் கலைஞர் உட்பட)

தொடர்பு:
அதிபர்.

**விம்ஸ்,** 14, மணிக்கூட்டுக்கோபுர வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 23356
(9188)

## தமிழர் நிதியம்

நிதி நிறுவனம்

### வாணி விழா

15-10-1983 காலை 9 மணி

நிகழ்ச்சி நிரல்

- வேதபாராயணம்
- ★ அருளாசி
  துர்க்கா துரந்தரி
  செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள்
- ★ திட்ட அங்குரார்ப்பணம்
  இலட்சுமி லாப முதலீட்டுத் திட்டம்
  வாணி வித்யா விருத்தித் திட்டம்
- ★ கீதசமர்ப்பணம்
  செல்வி சுஜாத்தா பத்மசிகாமணி அவர்கள்
- ★ வீணுகானம்
  யாழ். நுண்கலை மன்றத்தினர்
- ★ பிரசாதம் வழங்கல்
- ★ வீடியோ படக்காட்சி
  பக்திப்படங்கள்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**தமிழர் நிதியம்**
140, நாவலர் வீதி - யாழ்ப்பாணம்.
9286

★ இலங்கைத் தமிழர் பிரச்னை:

# "ஜம்மு-காஷ்மீர் போன்றுசுயாட்சி வழங்கினல் தீர்வு காணலாம்!"

## பி. ரி. ஐ. செய்தி ஸ்தாபனத்தில் தொண்டமான் கருத்து

புதுடில்லி, அக். 13,

"இந்தியாவில் ஜம்மு - காஷ்மீர் மாநிலத்துக்கு வழங்கப்பட்டிருக்கும் உரிமைபோன்று இலங்கையில் உள்ள தமிழர்களுக்கும் அவர்கள் வாழும் பிரதேசங்களில் சுயாட்சி உரிமை வழங்கப்பட்டால் இலங்கையில் இனப்பிரச்னைக்கு நீடித்த தீர்வுகாணலாம். இதுபற்றி இலங்கை ஜனதிபதி ஜயவர்த்தனவுக்கும் யோசனை கூறியுள்ளேன்" என்று இலங்கை கிராமிய, சிறுகைத்தொழில் அமைச்சர்திரு. எஸ். தொண்டமான் கூறினர்.

அமைச்சர் திரு. தொண்டமான் தற்போது இந்தியாவில் உள்ளார். அவர் நேற்று இந்திய செய்தி ஸ்தாபனமான 'பிரஸ் டிரஸ்ட் ஒவ் இந்தியா' (பி. ரி. ஐ )வின் காரியாலயத்துக்கு விஜயம் செய்தார். அங்கு அவர் அக்காரியாலயத்தின் பல்வேறு பிரிவுகளையும் பார்வையிட்டார். அதனைத்தொடர்ந்து அங்கு பணியாற்றும் ஊழியர்கள் மத்தியில் பேசுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

திரு. தொண்டமான் தொடர்ந்து கூறியதாவது: "இலங்கைத்தமிழர்களுக்கு அவர்கள் வாழும் பிரதேசங்களில் சுயாட்சி உரிமை வழங்கப்பட வேண்டுமென்றும் அதன் மூலமே அவர்கள் பிரச்னைகளுக்கு நீடித்த தீர்வுகாணமுடியுமென்றும் ஜனதிபதி ஜயவர்த்தனவிடம் ஆலோசனை கூறியுள்ளேன்.

### பிரதேச இராணுவம்

"இலங்கையில் சட்டத்தையும், ஒழுங்கையும், சிறுபான்மையினரின் நலன்களையும் பாதுகாக்க பிரதேச இராணுவமொன்று அமைக்கப்பட வேண்டுமென்றும் ஜனதிபதி ஜயவர்த்தனவிடம் கோரியுள்ளேன்.

பிரதேச இராணுவமொன்று இலங்கையில் அவசியம் தேவையானது. அதில் இனப்பாகுபாடின்றி சிறுபான்மையினத்தவரும் பல்வேறு மாகாணத்தைச் சேர்ந்தவர்களும் பங்குகொள்ளும் பட்சத்தில் கலவரங்கள் அல்லது வேறு பூசல்கள் ஏற்படும்போது அவற்றை சுமூகமாகத்தீர்த்துக் கொள்ளமுடியும்" என்றார்.

பத்திரிகையாளர்கள் உண்மையான செய்திகளுக்கே எப்பொழும் முக்கியமளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டதிரு. தொண்டமான் இலங்கைப்பிரச்னை பற்றி சில தவருன தகவல்களும் பத்திரிகைகள் வாயிலாக வெளியாகியுள்ளன என்றார்.

இலங்கைத் தமிழர் பிரச்னைகளுக்கு இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியின் முயற்சிகள் மட்டுமே சிறந்த தீர்வை அளிக்குமென்றும் இந்தியாவுக்கும் இயங்கைக்குமிடையிலான இலங்கைத்தமிழர் பிரச்னைபற்றிய பேச்சுக்கள தொடரவேண்டுமென்றும் திரு. தொண்டமான் கூறினர். (கி)

## அகதிகளுக்கு உதவி

(யாழ்ப்பாணம்)

அண்மையில் இடம்பெற்ற வன்செயல்களினுல பாதிக்கப்பட்ட தமிழ் அகதிகளின் புனர் வாழ்வுக்காக மானிப்பாய் ஆனந்த விளையாட்டுக் கழகம் 2160 ரூபாவை அகதிகள் புனர் வாழ்வுநிதியத்திடம் கையளித்துள்ளது.

தமிழ் மக்கள் முன்பும் பல தடவைகள் தாக்குதல்களுக்குள்ளாக்கப்பட்டு அகதிகளாக்கப்பட்டுவந்துள்ளனர். எனவே அவர்கள் மீண்டும் மீண்டும் இவ்வாறு அகதிகளாக்கப்படாமல் பயம்பீதியின்றி சமஉரிமையுடன் வாழக்கூடிய வகையில் தமிழ் தேசிய இனப் பிரச்சனைக்கு நியாயமான நிரந்தரமான அடிப்படையில் ஒரு அரசியல தீர்வு காணப்படவேண்டுமென்று இக்கழகம் வேண்டி நிற்கிறது. என இக்கழக தலைவர் திரு வ. திருநாவுக்கரசு தெரிவித்துள்ளார். (மா)

## ரங்கூனில் குண்டுவீச்சு: 3 இராணுவ வீரர்கள் பலி!

ரங்கூன் அக் 13

பர்மாவின் ரங்கூன் நகரில் நேற்று நிகழ்ந்த குண்டு வீச்சொன்றில் மூன்று பர்மிய இராணுவ வீரர்கள் கொல்லப்பட்டனர்.

இக்குண்டு வீச்சுச் சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை ரங்கூனில் நடைபெற்ற பயங்கரகுண்டு வெடிப்பையடுத்து நிகழ்ந்த இரண்டாவது பயங்கர சம்பவமென்று தெரிவிக்கப்பட்டது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை தென்கொரிய அமைச்சர்கள் நால்வர் உட்பட 20 பேரைக் கொன்ற பயங்கரவாதிகளே இக்குண்டு வீச்சுச் சம்பவத்துதுடனும் சம்பந்தப்பட்டிருக்கலாமெனத் தெரிவிக்கப்பட்டது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற குண்டு வைப்புச் சம்பவத்துடன்தொடர்புடைய பயங்கரவாதிகளைக் கைது செய்ய நெல்வயல் ஒன்றினூடாக பர்மிய துருப்புகள் நேற்றுசென்றனர். அப்போதே பயங்கரவாதியொருவர் அவர்களை நோக்கி குண்டொன்றை வீசினர். பின்னர் அப்பயங்கரவாதியும் காயமடைந்தார். தற்போது அவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். (கி)

## லெபனன் துறைமுகநகரில் மோதல்: 50 பேர் பலி!

பெய்ரூட், அக் 13

லெபனனில் நேற்று இடம் பெற்ற சண்டையொன்றில் 50 பேர் கொல்லப்பட்டனர். பலர் படுகாயமடைந்தனர். இச் சண்டை முஸ்லிம்கிளர்ச்சியாளர்களுக்கும், கம்யூனிஸ்ட் கட்சியினருக்குமிடையே வடக்கு துறைமுக நகரான திரிப்பொலியில் நடந்தது.

முஸ்லிம் கிளர்ச்சிப்படையினர் பாலஸ்தீன விடுதலை இயக்கத்தலைவர் யாசிர் அரபாத்தின் 'பட்டர்' படையைச்சேர்ந்தவர்களென்று தெரிவிக்கப்பட்டது. இவர்கள் தமது நேற்றைய சண்டையில் கம்யூனிஸ்ட் கட்சி நிலைகள் பலவற்றைக் கைப்பற்றினர் என்றும் அறிவிக்கப்பட்டது.

இயந்திரத் துப்பாக்கிப்பிரயோகம், பீரங்கிகள் மூலமான தாக்குதல்கள் என்பன இவ் விருசாரர்களுக்குமிடையிலான நேற்றைய பலத்த மோதலில் சணிசமானளவு இடம்பெற்றன.

உயிரிழந்த 50 பேரில் 37பேர் கம்யூனிஸ்ட் கட்சியையும், எஞ்சியவர்கள் முஸ்லிம்கிளர்ச்சிப்படைகளையும் சேர்ந்தவர்களாவர்.

லெபனனின் தெற்குப்பகுதியிலுள்ள சுகில்கர் மலைப்பகுதியிலும் நேற்றுபலத்த சண்டை நிகழ்ந்தது. இச்சண்டை டுரூஸ் கிளர்ச்சிப் படைகளுக்கும், லெபனன் இராணுவத்துக்குமிடையே நிகழ்ந்தது. இதில் ஆறு லெபனன் இராணுவ வீரர்கள் காயமடைந்தனர். (கி)

## புங்குடுதீவு வடகரை அணைப்பாதை

(புங்குடுதீவு)

இருபத்து நான்கு அடி அகலத்தில் ஏழாயிரம் அடி நீளத்திற்கு சிரமதானமூலம் அமைக்கப்பட்டுவரும் புங்குடுதீவு வடகரைஅணைப்பாதையில்அமையஇருக்கும் பாலத்துக்கான கட்டுவேலைகள் துரித கதியில் நடைபெறுகின்றன.

இருபத்தையாயிரம் ரூபா செலவில் கட்டப்படவிருக்கும் இப் பாலத்துக்கான அடிக்கலை அண்மையில்சட்டத்தரணி திரு எஸ்.கே.மகேந்திரன் நாட்டிவைத்தார். கட்டிடக் கலைஞர் திரு பங்கிராஜ் வேலைகளை பொறுப்பேற்று செய்து வருகிறர்.

அணைப்பாதையின் இரண்டாயிரத்து ஐநூறுவது அடியில் அமைக்கப்படும்இப்பாலம் இருபத்தைந்துஅடிநீளமும்பன்னிரண்டு அடி அகலமும் கொண்டதாகும். (அ)

## சத்துணவில் 'பல்லி' 68 சிறுவர்கள் மயக்கம்!

சென்னை, அக். 13

மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த தமிழக அரசின் சத்துணவு வழங்கும் நிலையமொன்றில் அறுபத்தெட்டுச் சிறுவர்கள் திடீரென மயக்கமுற்றதைத் தொடர்ந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இவ்வாறு சிறுவர்கள் மயக்கமுற்றதைத்தொடர்ந்து மதுரைப் பொலிசார் புலன் விசாரணைகளை மேற்கொண்டனர். அப்போது அவர்கள் அருந்திய உணவில் இறந்த 'பல்லி' ஒன்று காணப்பட்டது தெரிய வந்தது.

இந்த இறந்த பல்லியிலிருந்த விஷத்தன்மையே அவர்களின் திடீர் மயக்கத்துக்குக் காரணம் என்று தெரிவிக்கப்பட்டது.

எதிர்பாராதவிதமாகவே இவ்வாறு பல்லி ஒன்று அச்சிறுவர்களின் உணவில் இருக்கக்காணப்பட்டதென்று அறியப்படுகிறது. ஆயினும் பொலிசார் தொடர்ந்து புலன் விசாரணை மேற்கொள்கின்றனர்.

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட சிறுவர்கள் விபரீதமெதுவுமின்றித் தேறிவருகிறர்களென்று அறிவிக்கப்பட்டது. (கி)

## 'இலங்கை அரசுக்கு அமெரிக்கா உடந்தையாகஇருக்கக்கூடாது'

### சென்னை அமெரிக்க துணைத் தூதராலயத்தில் அ. தி. மு. க. பேரணி மகஜர் கையளிப்பு!

சென்னை, அக். 13

"மனித உரிமைகளை மதிப்பதாகக் கூறிக்கொள்ளும் அமெரிக்கா, இலங்கைத் தமிழர்களின் உரிமைகளை நசுக்கும் இலங்கை அரசாங்கத்துக்கு உடந்தையாக இருக்கக் கூடாது" என்று தமிழ்நாடு அண்ணு திராவிட முன்னேற்றக் கழகத்தினுல் சென்னையிலுள்ள அமெரிக்க துணைத்தூதராலயத்தில் கையளிக்கப்பட்ட மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அண்ணுதிராவிட முன்னேற்றக் கழகம் அமெரிக்க துணை ஸ்தானிகராலயத்துக்கு நேற்று பெரும் ஊர்வலமொன்றை நடத்தியது. இலங்கை அரசுக்கு ஆதரவாக அமெரிக்கா இருந்து வருவதாகத் தெரிவித்தே இந்த ஆட்சேப ஊர்வலம் அ. தி. மு. காவினுல் நடத்தப்பட்டது.

ஊர்வலத்துக்கு தலைமை தாங்கிச சென்ற அ.தி.மு.க. பொதுச் செயலாளர் திரு பா. உ. சண்முகம் சென்னை அமெரிக்க துணை தூதரக பொறுப்பதிகாரியான திரு ராய் விக்டேகரிடம் இலங்கைத் தமிழர்களின் நலன் குறித்து தமது கட்சியின் மகஜரைக் கையளித்து, அதனை அமெரிக்க அதிபர் திரு றீகனுக்கு அனுப்பும்படி கேட்டுக்கொண்டார். பொறுப்பதிகாரி திரு விக்டேகரும், மகஜரை ஏற்று அதனைத் தாம் அனுப்பி வைப்பதாக உறுதியளித்தார். தற்போது அம்மகஜர் வாஷிங்டன் அனுப்பப்படுவதற்காக புதுடில்லி அமெரிக்கத் தூதரகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது

அம்மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது: "இலங்கையில் தமிழர்கள் நடத்தப்படும் முறை மனித உரிமைகள் தத்துவங்களுக்கு சவாலாகஉள்ளது.

அமெரிக்கப் பாதுகாப்பமைச்சர் திரு. கஸ்பர் வெயின்பேகர் ஜனதிபதி ஜயவர்த்தனவுடன் நடத்திய பேச்சுக்கள் அபாயகரமானவை அமெரிக்கா எக்காரணம் கொண்டும் இலங்கை அரசுக்கு ஆயுத உதவிகளை வழங்கக்கூடாது.

மனித உரிமைகளுக்கு மதிப்பளிப்பதாகக் கூறிக்கொள்ளும் அமெரிக்கா இலங்கைத் தமிழர்களின் உரிமைகளுக்கும் மதிப்பளிக்கவேண்டும்" (கி)

## இடம்பெயர்ந்த வங்கி ஊழியருக்கு தமிழ்ப் பகுதிகளில் வேலை

### ஊழியர் சங்கம் நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

அண்மைக்காலக் கலவரங்களின்போது இடம்பெயர்ந்த இலங்கை வங்கி உத்தியோகத்தர்களைத் தமிழ்ப் பகுதிகளில் உள்ள இலங்கை வங்கிக் கிளைகளுக்கு இடமாற்றம் செய்ய இலங்கை வங்கி ஊழியர் சங்கமும், இலங்கை வங்கி உத்தியோகத்தர் சங்கமும் பெருமுயற்சி எடுத்துவருகின்றன.

மேலும் யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள இலங்கை வங்கிக் கிளைகளில் உத்தியோகத்தர் பற்ருக்குறை குறிப்பாக எழுதுவினைஞர், காசாளர் பற்ருக்குறை நிலவிவருவது குறிப்பிடத்தக்கது.

## மீன்வாடி அமைக்க மீனவருக்கு நிலம்

(நெடுந்தீவு)

நெடுந்தீவு மேற்கு வெல்லை கடற்கரையோரத்தில் அங்குள்ள மீனவர்கள் தமது வாடிகளை அமைப்பதற்கான நிலம் பகிர்ந்தளிக்கப் பட்டுள்ளது. இதனுல் மீனவர்கள் தமது வாடிகளை அமைக்கக் கூடியதாகவுள்ளது குறிப்பிடத்தக்கது. (அ)

## மணிவாக்கு

கேட்டி லுறுதி கூட்டுமுடைமை

— ஔவையார்

# நமது நோக்கு

## பர்மா படுகொலை

பர்மாவுக்கும் படுகொலைகளுக்கும் ஏதோ இணக்கமிருப்பதுபோல் நினைக்கவிடமுண்டு.

உலகின் மிகக் கொடிய கொலை பர்மாவில் சில வருடங்களுக்கு முன் நடைபெற்றது நினைவுக்கு வருகிறது. பர்மாவின் மந்திரிசபை முற்றாக ஒழித்துக்கட்டப்பட்ட கொடூர சம்பவம் உலக வரலாற்றில் என்றும் நடவாத கொடுமையென அன்று பேசப்பட்டது.

இன்று விருந்தினராக வந்த தென்கொரியாவின் சிரேஷ்ட அமைச்சர்கள் நால்வர் உட்பட 21 பேர் குண்டுவெடிப்பில் கொல்லப்பட்டது இன்னொரு ஏக்கத்தை அனைத்துலகிலும் ஏற்படுத்தியிருக்கிறது. அந்நாட்டின் ஜனாதிபதி தப்பியது தெய்வாதீனமே!

தென்கொரியாவின் கிரகநிலை இலங்கைத்தமிழர் நிலைபோன்று மிகத்தோஷமான தென்பதை சோதிடர் சொல்லத்தேவையில்லை.

ஒரு சில வாரங்களுக்கு முன்னராகவே 269 பயணிகளைக்கொண்டதெ. கொரிய போயிங் விமானம் சோவியத்ரஷ்ய பிரதேசத்தில் சோவியத்யூனியனுல் சுடப்பட்டதை உலகறியும்.

உயிரிழந்த அனைவரின் ஆத்மசாந்திக்கு ஐக்கிய அமெரிக்கா துக்கதினம் அனுட்டித்தது. இலங்கைத் தமிழர் ஆயிரக்கணக்கில் -முழுத்தொகை வெளிவருவது சந்தேகம்- இந்நாட்டில் திட்டமிட்டுக் கொல்லப்பட்டபடியால் இங்கு துக்கதினம் அனுட்டிக்க முடியாமற்போய்விட்டது; ஆனல் இவ்வித கொலையின் முழுத்தாக்கம் அதனை அனுபவித்த சமூகமே அதிகம் புரியமுடியும். இந்தியாவின் தமிழகம் காட்டிய அனுதாபம் உலக நாடுகளின் கவனத்தை ஈர்த்துள்ளது.

ஒன்றை அடுத்து இன்னென்று தென் கொரியாவின் தலைவிதியென்ருல் குறித்த நாடு மட்டுமல்ல, ஆசிய சமூகமே ஒரு பாதுகாப்பற்ற, சர்வதேச உறவுகளில் பலமற்ற நிலையிலிருப்பதை உலகுக்கு எடுத்துரைக்கிறது.

கொரிய குடாநாட்டின் உள்நாட்டுப்போர் வல்லரசுகளின் தலையீட்டால் அதனை இரண்டாகப் பிரித்து வைத்தது; போரில் நிலைகுலைந்து பிரிவினையால் பலவீனப்பட்ட கொரிய குடாநாடு, காலகதியில் சமாதான வாழ்வைக் கண்டது. சில வருடங்களுக்கு முன் பிரிந்தவை கூடும் சாத்தியமும் காணப்பட்டது. ஆனல் கம்யூனிஸசம், முதலாளித்துவமென்ற பிணக்கு வேரூன்றி விட்டதெனலாம்.

ஜெர்மனி இரண்டாகப் பிரிந்த போது மேற்கு ஜெர்மனி மிகவிரைவில் உலகில் முதன்மை பெற்றிருக்கும் செல்வ நாடென்ற சாதனைபோல் தென்கொரியா கைத்தொழிலிலும் வர்த்தகத்திலும் மிக விரைவில் நிலைநாட்டியது. இலங்கை போன்ற வறிய நாடுகளுக்கு இது ஒரு முன்மாதிரி.

தென்கொரியா பலநாடுகளுடன் நட்புறவு கொண்டு வர்த்தகத்திலும் தொழில் விருத்தியிலும் முன்னேற முயல்கின்றது; இந்தவளர்ச்சிக்கு முட்டுக்கட்டைகள் இருப்பது இயல்பு; ஆனல் கோழைத்தனமான அரசியல் கொலை அதன் வேகமான முன்னேற்றத்துக்கு ஒருசிறு காற்தட்டு போலிருந்தாலும் நாட்டின் நிரந்தர விருத்திக்கு பாரதூரமான பங்கம் ஏற்படுத்தமாட்டாது.

இந்தியா, இலங்கை போன்ற நாடுகளே தென்கொரியாவின் நட்பை பேண முயல்வதென்ருல், அந்நாட்டின் பொருளாதார பலத்தையும் மக்களின் வாழ்க்கை நிலையையும் ஒரளவிற்கு யூகித்தறியலாம்.

இலங்கையில் ஏற்பட்ட ஆடிக் கலவரத்தை ஒட்டி, இந்தியாவுக்கு தூதுசென்ற ஜனதிபதியின் விசேட தூதுவர், அவருடைய சகோதரர் எச். டபிள்யூ. ஜெயவர்த்தன, உடனடியாக நட்பு நாடுகளின் உதவியைத் தேடி மேற்கொண்ட சுற்றுலாவில் முதல் இடம் தென் கொரியாவே; இதன் முழு இரகசியம் எமக்குப் புரியாமலிருக்கலாம்.

தென் கொரிய ஜனதிபதி இன்று ஆரம்பித்த நீண்ட பயணத்தில் இலங்கையும் இடம்பெற்றிருந்தது. இப்படுகொலை அதனை தடுத்துவிட்டது.

எமது ஆடிக்கலவரம் ஜனதிபதி ஜெயவர்த்தனவின் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த பிரிட்டிஷ் மகாராணியின் அழைப்பை பூர்த்தி செய்ய முடியாது குழப்பிவிட்டது. இன்றைய பர்மா படுகொலை. தென்கொரிய ஜனதிபதி, ஜனதிபதி ஜெயவர்த்தனவை கொழும்பில் சந்திக்கும் சந்தர்ப்பத்தை முறியடித்துவிட்டது.

இவ்விரு அரிய சந்தர்ப்பங்கள் இன்றைய நிலையில் இலங்கைத் தமிழர்களுக்கே பெருநட்டம்; ஜனதிபதி ஜெயவர்த்தனவின் ஆட்சிக்கு உறுதி அளிக்க விரும்பும் பிரிட்டன், அமெரிக்கா போன்ற மேற்குநாடுகளும், தென்கொரியா, தாய்லாந்து போன்ற தெற்கு ஆசிய நாடுகளும் இலங்கைத் தமிழர் பிரச்னைக்கு அவசர தீர்வுகாண தகுந்த ஆலோசனையும் ஆதரவும் உதவுவார்களென நம்ப இடமுண்டு.

ஜெயவர்த்தன ஆட்சியைக் குலைக்க முயலும் தீய சக்திகளுக்கு எதிராக அவை உதவியும் வழங்க முடியும்; ஆனல்நாட்டின் தேசியஇனமாகிய தமிழர்களை மேலும் அடக்கி ஒடுக்கவோ, நாடு கடத்தவோ அல்லது இனக்கொலையைத் தீவிரப்படுத்தவோ நிச்சயம் உதவமாட்டா.

அரசியல் படுகொலை எவ்விதத்திலும் எவருக்கோ, எந்த நாட்டுக்கோ, உலகுக்கோ உதவாதென்பது யாவரும் அறிந்ததே; ஆனல் உலகின் அணிசேரா நாடுகள் வல்லரசுகளின் பிடியில் அகப்படுவது ஆபத்தென்பதையும் நாம் மறந்துவிடக்கூடாது.

## அதிகாரபீடத்திலுள்ளவர்கள் சிந்திப்பார்களா?

நாட்டில் அமைதி நிலவுகிறது; எல்லாம் சுமுகநிலைக்குத் திரும்பிவிட்டன என்ற ரீதியில் பிரசாரம் நடைபெறுகிறது. துயில்வோன்போல் நடிப்பவனை எழுப்பமுடியாது என்பது யாவரும அறிந்ததே. ஆயினும் ஒரு மிகமுக்கியமான பிரச்னையை அதிகாரபீடத்திலுள்ளவர்களுக்குச் சொல்லித் தீர்க்கவேண்டியுள்ளது. அது தான் பல்கலைக் சழக மாணவர் பற்றிய பிரச்னை.

ஒரு தமிழ் மாணவன் பல்கலைக் கழகம் புகுவதற்கு எவ்வளவு பாடுபடவேண்டியுள்ளது என்பதை முதலில் நாம் சிந்திக்கக் கடமைப்பட்டிருக்கிறேம். மாணவர்களும் பெற்ரேரும் எவ்வளவு சிரமப்படுகிருர்களென்பதை எவரும் எளிதில் புரிந்துகொள்ளமுடியும். தகுதியும் திறமையுமுள்ள பல மாணவர்களை முந்திக்கொண்டு முன்வரிசைக் கல்லவா வரவேண்டும்.

இவ்வளவு கஷ்டப்பட்டுப் பல்கலைக் கழகம் புகுந்த பின்னர் நடந்ததென்ன? கடந்த மே மாதம் தமிழ்மாணவர்கள் தம்மோடு கூடிப்படிக்கிற கேட்டுப்படிக்கிற சிங்கள மாணவர் கூட்டத்தினுல் படு மோசமாகத் தாக்கப்படவில்லையா? தமிழ் விரிவுரையாளர்கள்கூடத் தாக்கப்பட்டார்களே! பல்கலைக் கழக நிர்வாகமாவது, தர்மிஷ்ட அரசாங்கமாவது தக்கநடவடிக்கை எடுத்தனவா?

வாக்குறுதிகளை நம்பித் 'திரும்பிச்சென்ற தமிழ்மாணவர்கள் முகமூடியணிந்த சிங்கள நண்பர்களால் மீண்டும் தாக்கப்பட்டார்களே. தமிழ்மாணவர் விடுதிகளுக்கு பெற்ருேல்குண்டுகள் வீசப்பட்டனவே. நிர்வாகம் என்ன நடவடிக்கையெடுத்தது!

பேராதனைப் பல்கலைக் கழக விவசாயபீடத் தமிழ் மாணவர் ஒருவர் பாதுகாப்புப்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

மொறட்டுவைப் பல்கலைக் கழக மாணவர்கள் சிங்களக் காடையர்களினுல் மோசமாகத் தாக்கப்பட்டது மாத்திரமன்றி இனக்கலவரத்தினபோது விரிவுரையாளர் ஒருவரும், பொறியியல்பீட இறுதியாண்டு மாணவர் ஒருவரும இனவெறியரால் கொலலப்பட்டார்களே.

# மக்கள் கருத்து

இவை எல்லாவற்றிற்கும் மேலாகக் கடந்தஜூலை கடைசி வாரம் தொடக்கம் நடந்த கொலைகள் எத்தனை? கொள்ளை தீவைப்பு, வீடுடைப்பு கத்தி வெட்டு, பொல்லடிச் சம்பவங்கள் எத்தனை. இவற்றை உடனடியாகத்தடுக்க அரசாங்கம் முயன்றதா? முடிந்ததா?

முடிவில் என்ன நடந்தது? தட்டிக்கழிக்க முடியாதசூழ்நிலையில் தவிர்க்க முடியாத காரணங்களினுல், முழுக்க முழுக்கத் தனது விருப்பத்திற்கு மாருகவே அரசாங்கம் கப்பல்கள், ரயில் வண்டிகள், பஸ்வண்டிகள், விமானங்கள் மூலமாக முப்பதினுயிரத்துக்கும் அதிகமான அகதிகளை வடக்கிற்கும் கிழக்கிற்கும் அனுப்பிவைக்கவில்லையா? வந்தவர்களில் திரும்பிப் போனவர்கள் எத்தனை? போய்மீண்டும் திரும்பிவந்தவர்கள் எத்தனை?

இவ்வளவையும் கண்ணுற்கண்டும், காதாற்கேட்டும் பத்திரிகைகளில் வாசித்தும் அறிந்துகொண்டிருக்கிற சுமார் 1800 தமிழ் மாணவர்கள் திரும்பியும் போகமுடியுமா? இவர்கள் திரும்பிப் போக அஞ்சுவது நியாயம் என்று அமைச்சரவையின் மனதிலே படாவிட்டால் நியாயம் எங்கே? தருமம் எங்கே?

இந்த வருடம் புதிதாகப் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவு செய்யப்பட்டவர்கள் பட்ட சிரமம் கொஞ்சமா? முந்திய அரசாங்கம் பரீட்சார்த்தமாக முதன் முதல் 1975ல்நடாத்திய N. C. G. E. பரீட்சையில் திறமையாகச் சித்தியடைந்தவர்கள் பின்னர் U. N. P. அரசாங்கம் கொண்டு வந்த மாற்றங்களால் எவ்வளவு சிரமப்பட்டார்கள். அவர்களில் [illegible]ம், 2ம் முறைகளிற் பல்கலைக் கழகம் புகுந்தவர்கள்போக எஞ்சியவர் 1982ல் நடைபெற்ற A/L பரீட்சையில்தேறி இந்தமுறை தெரிவு செய்யப்பட்டிருக்கிருர்கள். இந்த முறை தெரிவு செய்யப்பட்ட மற்றவர்களும் இரண்டு அரசாங்கங்களினதும் பரீட்சார்த்த கல்வித்திட்டங்களால் இடப்பட்டவர்களே. 1975, 76ம் ஆண்டுகளில் N. C. G. E. பரீட்சையில் அகப்பட்டவர்களும் 1978, 79இல்

(5-ம் பக்கம் பார்க்க)

## தவயோகி சின்னத்தம்பி சுவாமிகள்

தாயகமான பாரத கண்டத்திலிருந்துஈழமண்டலம்சேர்ந்த வித்தகச் சித்தர் கணத்தில் பரமகுரு சுவாமிகள், கடையிற் சுவாமிகள், மூச்சம்புலவுச்சுவாமிகள் என்று பலர் அவ்வழிவழி வந்த ஞானியர் பரம் பரையில் ஒருவர் தான் தவத்திரு சின்னத்தம்பிச் சுவாமிகள் தென்மராட்சி மறுகம்புலோவில் அவதாரம் செய்த சுவாமிகள், இல்லற ஞானியாகி, செல்வச் சந்நிதி முருகனருள்பெற்று சிறந்த சித்தராய் விளங்கிஞர். நூற்றுக் கணக்கான சீடர்களின் பரம்பரையில் முருகப்பிள்ளைச் சுவாமிகளும், ஏகாம்பர வாத்தியாரும் குறிப்பிடத்தக்கவர்கள். திருவாசகச் சுவாமிகளெனப் பிரபந்தங்களில் போற்றப்படும் அருட்டிரு சபாரத்தினமடிகளால் பல ஆண்டுகள் மறுகம் புலோவிலுள்ள சுவாமிகளின்சமாதியில் தொண்டாற்றி திருவருளால் குருவருள் கைவரப் பெற்று திருவாசகத்தை தனது மூச்சாகவும் பேச்சாகவும் கொண்டுள்ளார்கள். கடவுள் சுவாமி யென்றழைக்கப்படும் முருகுப்பிள்ளை சுவாமிகளின் சமாதி கூட குருநாதனின் சமாதிக் கருகாமையிலமைந்திருக்கிறது. சுவாமிகள் ஆதியில் அருட்கோலத்துடன் இருந்த இடம் இன்று திருவாசகச்சுவாமிகளால் நினைவாலயம் ஆக்கப்பட்டிருக்கிறது. இணுவில் வைரவர் சுவாமிகள் இவர்களிலே மிக்க ஈடுபாடுடையவர்கள். இன்று சின்னத்தம்பி சுவாமிகளின் குருபூசை நாளாகும்.

சிங்கையாழியான்

## கலைத் தெய்வம்

தாயே சரசுவதி தரணிபுகழ் வாணிதேவி
நீயே துணை, நீலியே சரணடைந்தேன்!
கலைகளின் கருவே! கவின்பொழி முத்தே, மாயை,
அலையினுள் நெஞ்சம் அமிழ்ந்திடா தருள்குவையே

— மணிமன்றன்

வெள்ளிச் சிந்தனை:

## ஆசாரசீலம்

அருளாளன்

அமெரிக்கா என்ருல் ஆதிக்கமோ கம் என்றும் கம்யூனிசம் என்ருல் தட்டிப்பறித்தல் என்றும் நம்புவதுபோல் ஆசாரம் என்ருல் கோவிலுககுப் போகும் போது குளித்துவிட்டுப் போதல் எனப்பலர் நம்புகின்ருர்கள்.

சுகாதாரத்தை நல்குவதான புனிதமும் தூய்மையும் மிக்க செயல்களைத் தொடர்ந்து செய்பவனே ஆசார சீலமுடையவன் என்ற தகுதியைப் பெறுவான்.

சைவசமயிகளின் நல்லொழுக்கமாகிய ஆசாரத்திற்கும்தீயொழுக்கத்திற்கும் சாட்சியாக விளங்குபவா நீதிமய்மாய் எங்கும் நிறைந்திருக்கின்ற சிவபெருமானேயாவர் ஆதலால் தமக்கு நன்மை தருவது என்பதோடமையாது பிறருக்கும் உலகற்கும் நன்மையே பெருக்கும் நல்லொழுக்கச் செயல்களை இடையருது தொடரும் பொறுப்புச் சைவசமயருக்கு உண்டு.

கொலை, களவு முதலிய பஞ்சமாபாதகங்களை மனவிருப்பத்துடனே சந்தர்ப்பவசமாகவோ செய்பவன் கீழ் நிலையை அடைவான் என்று கூறுவது போல நம்சமய சாஸ்திரங்கள் சைவ சமயி ஒருவன் கைக்கொள்ள வேண்டிய பழக்கங்களையும், தள்ளத்தக்க தீமைகளையும் தொகுத்தும் வகுத்தும் அட்டவணைப் படுத்தியும் கூறியுள்ளன.

சைவம் போதிக்கும் புறத்தூய்மை பற்றிய நடைமுறைகள் சுகாதார விஞ்ஞான சம்மதமானவைகளாகவும் எவராலும் மதிக்கத்தக்க நாகரீக அழகு நிறைந்ததாகவும் இருப்பதால் ஒவ்வொரு சைவசமயத்தவனும ஆசாரசீலனுக வாழ முயலவேண்டும்.

எமது ஆலயங்களில் திருவிழா முதலிய வழிபாடுகளின் பின் எல்லோருக்கும் நன்மையுண்டாக வேணடும் எனஇறைவனை வணங்கி (ஆசீர்வாதம் செய்கையில்) வாழ்த்துகையில் ''எல்லோரும் சதாசாரசம்பன்னர்களாக'' விளங்கட்டும் எனவும் ஆசீர்வதிப்பர்.

தனக்கும் பிறர்க்கும் அருவருப்பு உண்டாகத் தக்க வகையில் கண்டகண்ட இடங்களிலும் மூக்கு நீர் சிந்துதல், எச்சில் உமிழ்தல், பலரும் பழக வேண்டிய பொதுஇடங்களை அசுத்தம்செய்தல் கிணற்றின் நாலுபக்கங்களிலும் நடைபாதையிலும் வாய் கொப்பளித்தல் என்பன சிறுவர் பெரியவர் என்ற வேறுபாடு இன்றிக் கைவிட வேண்டிய தீயபழக்கங்களாம்.

மனிதரெல்லோரும் பொதுவாக சிந்திக்காமலே பல தீய பழக்கங்களைப்பழகி விடுகின்றனர். பின்னர் தாமே சிந்தித்தாலும் பிறர் தெளிவாக உணர்த்தினுலும் கைவிடமுடியாமல் அவதிப்படுவது மட்டுமன்றி குற்றங்களையும் தவறுகளையும் நீக்கமுயலாது வளர்த்தும் விடுகின்றனர்,

ஒவ்வொருவரும் தாம் பழகிய தீயொழுக்கங்களை நீக்க முயல்வதோடு நற்பண்புகளைப் பயிலப்பழகவேனும் முயலவேண்டும். தம்முயற்சிகைகூடாத சந்தர்ப்பத்தில் நல்லொழுக்கமுள்ளவர்களாக வாழ்வதற்கென்றே இறைவனை வணங்குவதும் அவசியம்.

வழித்தலைப்படுவான் முயல்
கின்றேன்
என்னைப் போலுன்னைப்பா
விக்கமாட்டேன்
சுழித்தலைப்பட்ட நீரதுபோலச்
சுழல்கின்றேன் சுழல்கின்ற
தென் உள்ளம்
கழித்தலைப்பட்டநாயது போல
ஒருவன்
கோல்பற்றிக் கறகற
இழுக்கை
ஒழித்து நீ அருளாயின செய்
யாய்
ஒற்றியூரெனும் ஊருறை
வானே.

— சுந்தரமூர்த்திநாயனுர்

# மேற்கு ஜெர்மனியிலிருந்து 5லட்சம் 'பாஸ்போட்' புத்தகம்

(கொழும்பு)

குடிவரவு, குடியகல்வுத் திணைக்களம் 5 லட்சம் கடவுச் சீட்டுப் புத்தகங்களை அச்சடித்துத்தருமாறு மேற்கு ஜெர்மனியிலுள்ள நிறுவனமொன்றிற்கு 'ஆடர்' கொடுத்துள்ளது.

இது தொடர்பாக உலக ரீதியில் கேள்விகள் கோரப்பட்டு, மேற்கு ஜெர்மனியிலுள்ள நிறுவனத்திற்கு இவற்றை அசசடிக்கும் கேள்வி வழங்கப்பட்டது.

தற்போது ஏற்பட்டுள்ள கடவுச்சீட்டுப் புத்தகங்களுக்கான தட்டுப்பாட்டை நீக்க இது உதவுமென்று குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்

15 000 கடவுச்சீட்டுப் புத்தகங்களை அச்சடிப்பதற்கான ஆடர் ஏற்கனவே பிரெஞ்சு அரசாங்கத்திற்கு வழங்கப்பட்டிருந்த போதும், அவை தேவையைப் பூர்த்தி செய்ய மாட்டாதென்றும் அவ்வதிகாரி தெரிவித்தார்

கடவுச்சீட்டுப் புத்தகங்களுக்கான அவசர தேவை காரணமாக ஒரு தொகுதி கடவுச்சீட்டுப் புத்தகங்கள் அரசாங்க அச்சகத்தில் அச்சிடப்பட்டன.

சில மத்தியகிழக்கு நாடுகள் 'இ', 'எவ்' தொடர் இலக்கமுடைய கடவுச்சீட்டுப் புத்தகங்களை ஏற்றுக்கொள்ள மறுப்பதால், இந்த தொடர் இலக்கங்களையுடைய கடவுச்சீட்டுப் புத்தகங்களை வைத்திருப்பவர்களும் 'ஜி' தொடர் இலக்கமுடைய கடவுச்சீட்டுப் புத்தகங்களைப் பெற விண்ணப்பித்துள்ளதாகவும் அவ்வதிகாரி தெரிவித்தார். (வெ)

## பேராதனை விவசாய பீட புதிய மாணவருக்கான
# செயல்முறைப் பயிற்சியை வட்டக்கச்சியில் நடத்தவும்
## யாழ். அரச அதிபரிடம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

பேராதனைப் பல்கலைக்கழக விவசாய பீடத்திற்கு புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கான 6 மாத கால செயல்முறைப் பயிற்சியை மகாஇலுப்பள்ளமவுக்குப் பதிலாக வட்டக்கச்சி அரசினர் பண்ணையில் தற்காலிகமாக நடத்த ஏற்பாடு செய்யுமாறு மேற்படி விவசாய பீடத்திற்குத் தெரிவான யாழ். மாவட்ட மாணவர்கள்யாழ்அரசாங்க அதிபரைக் கேட்டுள்ளனர்.

இதுகுறித்து இம்மாணவர்கள் யாழ். அரசாங்க அதிபருக்கு எழுதியுள்ள கடிதத்தில் மேலும் தெரிவித்துள்ளதாவது.

பேராதனைப் பல்கலைக் கழகத்திற்குப் புதிதாக தெரிவு செய்யப்பட்ட விவசாயபீட தமிழ் மாணவர்களுக்கான பயிற்சிநெறி இம்மாதம் 2-ம் திகதி ஆரம்பமாகியுள்ள பொழுதும் இம் மாணவர்கள் தகுந்த பாதுகாப்பு இன்மை காரணமாக விரிவுரைகளுக்கு செல்லவில்லை.

இம்மாணவர்களுக்கு அனுராதபுரத்தில் உள்ள மகா இலுப்பள்ளமவில் 6 மாத கால செயல்முறை பயிற்சி நெறியே முதலில் நடைபெற உள்ளது இச்செயல்முறை பயிற்சி நெறி மழை காலங்களிலேயே செய்ய முடியும். இம் மாணவர்கள் தொடர்ந்து இவ்வாறு விரிவுரைகளுக்குச் செல்லாமல் இருப்பின் இவர்கள் தங்கள் பயிற்சி நெறியை ஆரம்பிக்க அடுத்தவருடம் மழைகாலம் வரும்வரை காத்திருக்க வேண்டிய நிலையே ஏற்படும்.

இம்மாணவர்களுக்கான இச் செயல்முறைப் பயிற்சி நெறியை தற்காலிகமாக வட்டக்கச்சி பண்ணையில் நடத்தலாம்.

தமது நிலைகுறித்து பேராதனை விவசாயபீடத்தலைவர், உப-வேந்தர், மகா இலுப்பள்ளம பொறுப்பதிகாரி, பல்கலைக்கழக மான்ய ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் ஸ்டான்லி கல்பகே ஆகியோருக்குக்கடந்தமாதம் 27-ம் திகதி மகஜர்களை அனுப்பியபோதிலும் இதுவரை எதுவித பதிலும் இல்லை என்றும் இம்மாணவர்கள் தெரிவித்தனர். மா

# இன்றைய பலன்

புரட்டாதி 28-ம் திகதி
வெள்ளிக்கிழமை
(14-10-88)

மேடம்: வாகன விருத்தியுடன் இல்லத்தில் திருப்தி காணும் மோகன வாழ்வு கிட்டும் முன்னேற்றமும் உண்டு முதியவர் ஆசியுடன் தாய் வழித்தனதானியமும் சேரும்.

இடபம்; உள்ளம் இன்பத்தால் துள்ளும் புதிய நண்பர்களின் சேர்க்கை கிடைக்கும் நீண்டநாள் பிணி நிவர்த்தியாவதற்கும் இடமுண்டு பிள்ளை ஒன்றின் கல்வி முன்னேற்றம் மகிழ்ச்சிதரும்.

மிதுனம்: சிந்தனையின் தாக்குதலால் உடல் நலம் பாதிக்கப்படலாம் மனதில் அமைதி குன்றும் திடீர் முடிவுகளைத் தவிர்த்துக் கொள்ளவும்தொழிலில் தொல்லை உருவாகும்.

கடகம்: கனிவான நினைவுகள் தலைதூக்கும் காதல் விவகாரங்களுக்கும் இடமுண்டு கனிவான பேச்சின்மூலம் கடினமான காரியத்தைக் கூடச் சாதிக்க முடியும்.

சிங்கம்: கண்களில் கனல் கொதிக்கும் கருத்தினில் கர்வம் தோன்றும் . வெளியிடத்துத் தொடர்புகளில் மந்தநிலை தென்படும் திடீர்ப் பயணம் திகைக்க வைக்கும்.

கன்னி: செய்தொழில் மூலம் சிறப்புக் கிடைக்கும் போட்டா போட்டிகளில் வெற்றி உங்கள் பக்கம் இருக்கும் விளையாட்டு வீரர்கள் முதலிடத்தைப்பெறுவார்கள்.

துலாம்: புதுமையான எண்ணங்கள் தலைதூக்கும்தொழில் துறையில் புதிய சாதனை உருவாகும் கற்றவர்கள் ஆதரவு தப்பாமல் கிடைக்கும் இடமாற்றத்துக்கான வழிவகைகள் மேற்கொள்ளப்படலாம்.

விருச்சிகம்: மெத்தவும் பொருள்சேரும் மேலிடத்து ஆதரவு தப்பாமல் கிடைக்கும் தித்திக்கும் செய்தியுடன் தேனான வாழ்வும்உண்டு உறவு முறைகள் பலப்படும் உள்ளத்தில் உவகை துள்ளும்.

தனு: துன்பத்தின் சாயல் மனதிலே படியும் பிறர் புனைந்துரைகளால் மனது புண்படும் எக்காரியத்திலும் அதிக கவனம் செலுத்தவும் உதவி செய்யப்போய் குறைகேட்க நேரிடும்.

மகரம்: பல வழிகளிலும் பணம் பாழாகும் வேண்டாத வீருந்தினர்களின் வருகை உங்களுக்கு வேதனையைத் தரலாம் பெண் சகோதரர் மூலம் பிரச்னை உருவாகும் சுமையான வாழ்க்கை.

கும்பம்: துண்டிக்கப்பட்ட தொடர்பு மீண்டும் துளிர் விடுவதற்கு இடமுண்டு இனிமையான பேச்சின் மூலம் எல்லோரையும் கவர்ந்து கொள்வீர்கள் அழைப்புக்கள் மகிழ்ச்சியைத்தரும்.

மீனம்: அலைமோதும் எண்ணங்கள் உங்கள் அமைதிக்கு பங்கம் ஏற்படுத்தும் வேண்டாத தலையீடு பொறுமையைச் சோதிக்கும்.

**சோதிடக்கலாநிதி**
**திருமலை**
**க. வேலுப்பிள்ளை**

## கீரிமலையில் நாளை விசேட சாந்தி ஹோமம்

(கீரிமலை)

கீரிமலை நகுலேஸ்வர ஆலய கடைசி சனிக்கிழமை விரத விசேட சாந்திஹோமம், நாளை காலை நடைபெறவிருக்கிறது.

விசேட அபிஷேக ஆராதனைகளும் நடைபெறும்.

## ரூபவாஹினியில் இன்று

6-00 இன்றைய நிகழ்ச்சிகள்
6-02 எனதுபெயர்''பலவேறு நாடுகளைச்சேர்ந்த சிறுவர்கள் தமது விபரங்களைத்தரும் தொடர் சித்திரம் (ஆங்கிலம்)
6-30 சிறுவர் நிகழ்ச்சி (சிங்களம்)
7-00 செய்திகள் (தமிழ்)
7-14 நாளைய நிகழ்ச்சிகள்
7-15 'செவைவல்' வன வாழ்க்கைபற்றிய சித்திரம் (ஆங்கிலம்)
8-15 செய்திகள் (சிங்களம்)
8-30 சிங்கள நிகழ்ச்சி
9-00 'ரெபேக்கா' - பிரபல இயக்குனர் அல்பிரட் ஹிச்சொக் நெறிப்படுத்திய திரைப்படம்
9-30 செய்திகள் (ஆங்கிலம்)
9-50 'ரெபெக்கா'தொடர்ச்சி
11-30 நிகழ்ச்சிகள் முடிவு.

## அதிகார பீடத்தி...

4-ம் பக்கத் தொடர்ச்சி)

நடைபெற்ற G C. E. (O/L) பரீட்சையில் தேறியவர்கள் தான் இந்தமுறை பல்கலைக் கழகத்திற்குத் தெரிவுசெய்யப் பட்டிருக்கிறார்கள். இவர்கள் பாழாக்கிய காலம், சக்தி, பணம் கொஞ்சமா? இவ்வளவுக்கும் பின்னர் இன்றைய சூழ்நிலையில் இவர்கள் பேராதனைக்கும், கொழும்புக்கும் மொறட்டுவைக்கும் மகா இலுப்பலமவிற்கும் போய்ப் படிப்பதென்றால் அவர்கள் தலைவிதியை என்னென்பது. கடந்த மே, யூன், யூலை மாதங்களில் மூத்த பல்கலைக் கழக மாணவ சகோதரகள் பட்டுவந்த பாட்டைப் பார்த்துக்கொண்டிருந்தவர்கள்.சுற்ற மித்திரர்கள் கப்பலிலே வந்திறங்கிய கண்ணறுவியைப் பார்த்துக்கொண்டிருந்தவர்கள ஊரடங்குச்சட்ட நேரத்திலே படைவீரரும் காவல்படையினரும் எவ்வாறு தத்தம் கடமைகளைச் செய்தார்கள் என்பதை நன்றாகக் கேள்விப்பட்டு அறிந்தபின்னரும் தமிழ் மாணவர்கள் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு தவிர்ந்த ஏனைய இடங்களிலுள்ள பல்கலைக் கழகங்களிற் போய்ப் படிக்க மனம் ஒருப்படுமா?

அகதிகள் கப்பல்களில் இடம் பெயர்ந்து வடக்கிற்குப்போனதால் நாடு பிளவுபட்டுவிடவில்லை. அதுபோல தமிழ் மாணவர்கள் யாழ்ப்பாணத்திலும் மட்டக்களப்பிலும மாத்திரம் படிப்பதால் நாடு பிளவுபட்டு விடாது. அரசாங்கம் தமிழர்களின் அரசியல் பிரச்சனைகளைத் தீர்க்கும் வரையும் மாணவர்களின் படிப்பை ஒத்திவைத்தல் கூடாது சமாதான சூழ்நிலைஉருவாகும்வரை மாணவர்களின் பொன்னான பொழுதை வீணடிக்கலாமா? அரசியல்வாதிகளின் தவறுகளுக்காக ஒரு மாணவர் பரம்பரையை ஒரு சந்ததியையே பாழாக்குவது விவேகமான நியாயமான செயலாகாது. இன்று தமிழ் மாணவர்களின் பிரச்னைக்குக் குரல் கொடுக்க அரசியல் தலைவர்களில்லை. பத்திரிகைகளின் முக்கியத்துவம் கொடுக்க வேண்டிய விஷயத்துக்கு முக்கியத்துவம் கொடுப்பதில்லை. பல்கலைக்கழக மாணவர்கள் அனாதைகளாக் கப்பட்டுள்ளார்கள். அரசியற் சீர்கேடுகளை மேலும் மோசமாக்கக்கூடிய பிரச்னை இது. ஆகவே அதிகார பீடத்திலுள்ளவர்களோடு அனைவரும் சேர்ந்து தீர்வு காணவேண்டிய பிரச்னை இது. தற்காலிகமாக சகல தமிழ் மாணவர்களும் யாழ். மட்டக்களப்பு பல்கலைக்கழகங்களில் கல்வியைத்தொடர வழிசெய்யவேண்டியதே முதல் வேலை. காலப்போக்கில் எல்லோரும் எல்லா இடங்களிலும் போய்ப் படிக்கக்கூடிய நிலை வரலாம், அந்த நிலை வரும்வரையும் இந்த மாணவர்கள் காத்திருப்பதா?

**ச. பரநிருபசிங்கம்**
அளவெட்டி.

## காசிஆனந்தன் தமிழகம் சென்றார்

(மன்னார்)

கவிஞர் காசி ஆனந்தன் நேற்று முன்தினம் தமிழகம் பயணமானார்.

இலங்கையில் தமக்குள்ள சில அரசியல் நெருக்கடி காரணமாகவே தாம்இந்தியா செல்வதாகவும், எப்போது திரும்பி வருவதென்று இன்னும் தீர்மானிக்க முடியாத ஒரு நிலையிலேயே தாம் செல்வதாகவும் கவிஞர் நமது நிருபரிடம் தெரிவித்துள்ளார்.

தலைமன்னார் இராமேஸ்வரம் ஊடாகவே அவர் இந்தயா சென்றுள்ளார்.

## யாருடையது

ஒரு தேசிய அடையாள அட்டையுடன் கூடிய சாரதி அனுமதிப்பத்திர மொன்றினை யாழ்ப்பாணம் கிளிநொச்சிப்பாதையில் ஓடும் மினிபஸ்ஸில் கிளிநொச்சி திருநகரைச் சேர்ந்த திரு கே.வி அமிர்தலிங்கம் என்பவர் கண்டு எடுத்து ஈழநாடு காரியாலயத்தில் ஒப்படைத்துள்ளார். உரியவர் தகுந்த அத்தாட்சி காட்டிப் பெற்றுக் கொள்ளவும்.

## 'சட்டர்டேறிவியூ' விவகாரம்:
# 8-ம்,9-ம்திகதி விசாரணைகள்: 20-ம் திகதி தீர்ப்பு

(கொழும்பு)

''சட்டர்டேறிவியூ' ஆங்கில வாரப் பத்திரிகை தொடர்பாக உயர் நீதிமன்றின் செப்டம்பர் 8-ம், 9-ம் திகதி விசாரணைகள் செல்லுபடியாகுமா என்பதுபற்றிய தீர்ப்பு இம்மாதம் 20-ம் திகதி வழங்கப்படும்.

'சட்டர்டேறிவியூ' பத்திரிகை தொடர்பான மனித உரிமைகள் மீறல் வழக்கு செப்டம்பர் 8-ம், 9-ம் திகதிகளில் உயர் நீதிமன்ற நீதியரசர்கள் முன்னிலையில் விசாரிக்கப்பட்டது. ஆயினும் அத்திகதிகளில் அவ்வழக்கை விசாரித்த நீதியரசர்கள் அப்போது பதவி இழந்தவர்களாகக் கருதப்பட்டதால் அவ்விசாரணைகள் செல்லுபடியாகுமா என்ற சர்ச்சையை 'சட்டர்டேறிவியூ'பத்திரிகை சார்பில் ஆஜரான சிரேஷ்ட சட்டத்தரணி திரு. எஸ். நடேசன் கியு. சி. ளெப்பியிருந்தார்.

பிரதம நீதியரசர் திரு. நெவில் சமரக்கோன் உட்பட ஏழு நீதியரசர்கள் திரு. எஸ். நடேசனின் வாதத்தை ஆராய்ந்தனர். அவர்கள் அவ்வாதம் தொடர்பான தீர்ப்பை எதிர்வரும் 20ந் திகதி வழங்குவதாக அறிவித்தனர். (கி)

## செயலாளராக நியமனம்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலை அபிவிருத்திச் சங்கத்தின் செயலாளர் திரு என்.கனகரத்தினம் தமது பவியை ராஜினாமாச் செய்துள்ளார்.

இதனையடுத்து புதிய செயலாளராக திரு க.சிவானந்தம் நியமிக்கப்பட்டுள்ளார்.


# HONDA

எங்களது ஐந்து வருட அளப்பரிய சேவையைக்
கொண்டாடுமுகமாகக் கீழ்க்காணும் Modelகளில்
முதல் பத்து மோட்டார் சைக்கிள்களுக்கு
மாத்திரம்
விஷேட கழிவுகளையும் இலவச கெல்மெற்றையும்
வாடிக்கையாளர்களுக்கு அளிக்க முன்வந்துள்ளோம்.
இவ்வரிய சந்தர்ப்பத்தை நழுவவிடாது முந்துங்கள்.

| மொடல் | விலை | கழிவு | இலவசம் |
|---|---|---|---|
| CD — 200 | 34,600/- | 1000/- | ஒரு கெல்மெற் |
| CD — 125 T | 29,900/- | 1000/- | ஒரு கெல்மெற் |
| CG — 125 | 21,900/- | 750/- | ஒரு கெல்மெற் |

(பழைய மொடல்)
CLASSIC

**கன்ரேபியா லிமிட்டெட்**
21, பிரதான வீதி. யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 24201

# கோண்டாவில் இராணுவத்தாக்குதல் வழக்கு:

# 'ரயிலில் வசதியாக இடம்பிடிக்க சுன்னுகத்திலிருந்து புறப்பட்டேன்"

## குறுக்குவிசாரணையில் மொகிதீன்

(யாழ்ப்பாணம்)

''எனக்கு யாழ்ப்பாணம் மட்டும் தான் தெரியும். சுன்னுகம், கோண்டாவில் தெரியாது. ரயிலில் வசதியாக இடம் பிடிப்பதற்காக சுன்னுகம் ரயில் நிலையத்திற்குச் சென்று அங்கிருந்து பயணமானேன்''

இராணுவத்தினர் தாக்கியதாக குற்றம் சாட்டித் தொடரப்பட்ட வழக்கில் குறுக்கு விசாரணையின் போது சாட்சியமளித்த பேருவளையைச்சேர்ந்த எம்.வி. மொகிதீன் மேற்கண்டவாறு கூறினர்.

இவ்வழக்கு யாழ். நீதிமன்றத்தில் நீதவான் எஸ். நாகராஜா முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது.

இவ்வழக்கில் கோண்டாவில் ரயில் நிலையத்தில், இராணுவ சிப்பாய்களான சந்திரசிறி, புஞ்சிபண்டா ஆகியோர் ரயிலில் சென்றபோது பேருவளையைச் சேர்ந்த மொகிதீனை தாக்கியதாகக் குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

எதிரிகள் சார்பில் சட்டத்தரணி ஆர். பி. சபாரத்தினம், சட்டத்தரணிகள் விஜயா சிதம்பரநாதன், ரி.லிங்கராஜா ஆகியோரின் அனுசரணையுடன் ஆஜரானுர், வழக்காளி தரப்பில் சட்டத்தரணி ஆர். விஸ்வநாதன் பொலிஸாரின் உதவியுடன் ஆஜரானுர்,

சட்டத்தரணி ஆர். பி. சபாரத்தினம் குறுக்குவிசாரணை செய்தபோது சாட்சி கூறியதாவது: ஆஸ்பத்திரியில் பொலிஸாருக்கு வாக்கு மூலமளித்தேன் நல்ல நிலையில் இருந்தேன் அந்த வாக்குமுலத்தில் புதிதாக ஒன்றும் கூறவில்லே.

சட்: நடந்த எல்லாவற்றையும் சொல்லாமல் விட்டிருக்க மாட்டீர்? - ஆம்.

சட்: இருஎதிரிகளேயும் தெரியும்? சம்பவத்தின் பின்னர் தான் தெரியும்.

சட்: சம்பவத்தின் போது எதிரிகளின் பெயர் தெரியுமா? - தெரியாது.

சட்: பெயர்களே எப்படி அறிந்தீர் ? - இராணுவத் தலைமைக்காரியாலயத்திலிருந்து பெற்றேன்.

சட்: அடையாள அணி வகுப்பு நடைபெற்றதா? - இல்லே.

சட்: அடையாளம் காண விசேட அம்சங்கள் ஏதாவது உண்டா! - இல்லே சம்பவம் நடக்கும் போது எதிரிகளே நன்ருக பார்த்துக் கொண்டிருந்தேன். அந்தப்பார்வையில் இவர்கள்தான் என்று நிச்சயமாகச் சொல்லமுடியும்.

### ராணுவ உடையில் இருந்தார்கள்

சட்; இராணுவ உடை அணிந்திருந்தார்கள் ? - ஆம்.

சட்: தொப்பி அணிந்திருந்தார்கள்! - ஆம்.

சட்: என்ன துப்பாக்கி வைத்திருந்தார்கள், ரைபிளா இயந்திரத்துப்பாக்கியா? - பின்னல் தொங்கவிடும் துப்பாக்கி

சட்: அங்கு வேறு இராணுவத்தினர் சீருடையுடன் நின்ருர்களா? - இல்லே.

சட்: ரயில்பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் நின்ருர்களா?- இல்லே அவர்களே நன்ருகதெரியும் அன்று காணவில்லே.

சட்: நடந்தவற்றை எல்லாம் கூறிவிட்டீர்? - ஆம்

சட்: ஒன்றையும் தவறவிடவில்லே? - இல்லே.

சட்; பொலிஸ் வாக்கு மூலத்தில் இங்கு கூறியவற்றில் அதிகமானவற்றைக் கூறவில்லே? - கூறியிருக்கிறேன்.

சட்: டாக்டர் என்ன நடந்ததென்று உமக்குச் சிகிச்சையளிக்குப் போது கேட்டாரா? - ஆம்.

சட்: இச்சம்பவம் எப்படி நடந்ததென்று டாக்டருக்கு நீர் கூறவில்லே? - டாக்டர் கேட்கவில்லே நான் கூறவில்லே

சட்: காயம் எப்படி ஏற்பட்டது என்று டாக்டர் கேட்டாரா? - தண்டவாளத்தில் விழுந்ததினுல் காயம் ஏற்பட்டதாகக் கூறினேன்.

### டாக்டருக்கு கூறவில்லே

சட்: டாக்டருக்கு அப்படி நீர் ஒரு வார்த்தை கூடக் கூறவில்லே? - கூறியிருக்கிறேன்.

சட்: 1-ம் எதிரி வந்து முகத்தில் நெஞ்சில் தலேயில் எப்படி அடித்தார்? - பாரமான பொருள் ஒன்றினுல் அடித்தார்.

சட்: அப்பொருளே நீர் காணவில்லே? - காணவில்லே.

சட்: என்ன பொருள் என்று சொல்ல முடியுமா? - சொல்ல முடியாது.

சட: என்ன ஆயுதத்தால் அடித்தார்? - ஆயுதத்தைக் காணவில்லே.

சட்: அவர் அடித்ததில் வலி ஏற்பட்டதா? - ஆம்.

சட்: எங்கெல்லாம் வலிஏற்பட்டது?- தலேயில் முகத்தில், உடம்பெல்லாம்.

சட்: ரயிலில் எத்தனே பேர் இருந்தார்கள்?-முழு ரயிலிலுமா அல்லது எனது பெட்டியிலா, அல்லது என்பகுதியிலா கேட்கிறீர்கள்.

சட்: உமது பகுதியில்?- சுமார் 10 பிரயாணிகள் இருந்தனர்.

சட்: தெரிந்த ஆட்கள் இருந்தார்களா?-இல்லே.

சட்: ரயில் எப்போவந்தது?- 5-45 மணிக்கு.

சட்: உமக்கு சுன்னுகம், கோண்டாவில், தெரியுமா?- தெரியாது. யாழ்ப்பாணம் மட்டும்தான் தெரியும்.

சட்: அப்போது ஏன் சுன்னுகம் போனீர்?-யாழ்ப்பாணத்தில் ரயிலில் இடம் கிடைக்காது சுன்னுகத்திற்கு போனுல் ரயிலில் வசதியாக இருந்து போக இடம்கிடைக்கும் என்பதால் சுன்னுகம்போய் ரயில் எடுத்தேன்.

சட்: சுன்னுகத்திற்கு எப்படிப்போனீர்?-பஸ்ஸில்.

சட்: நீர் ரயிலில் ஏறி எவ்வளவு நேரத்தால் சம்பவம் நடந்தது?-சில நிமிடங்களால்.

சட்: முதலில் 1ம் எதிரி அங்கிருக்கவில்லே?-இல்லே.

சட்: எவ்வளவு நேரத்தால் 2ம் எதிரிபோய் 1ம் எதிரியைக் கூட்டிவந்தார்?-5நிமிடத்தால்.

சட்: உம்மை 1ம் எதிரி ரயிலுக்கு வெளியில் தள்ளிவிட்டார்?-ஆம்.

சட்: பொலிஸ் வாக்குமூலத்தில் இதனே கூறினீரா?-ஆம்.

சட்: இங்கு கூறியவற்றைப் பொலிஸ் வாக்குமூலத்தில் சொல்லவில்லே?-நடந்தவற்றைப் பொலிஸாருக்கு கூறினேன்.

சட்: சம்பவம்பற்றி இப்ப உமக்கு இருக்கும் ஞாபக சக்தியிலும்பார்க்க, பொலிஸாருக்கு வாக்கு மூலம் அளிக்கும்போது ஞாபக சக்தி அதிகமாக இருந்திருக்குமல்லவா?-சம்பவம் நடந்தபின் காயங்களினுல் பாதிப்படைந்திருந்தேன். மறுநாளே பொலிஸார் வாக்கு மூலம் எடுத்தனர் பயத்தினுல் குழப்பமான நிலையிலிருந்தேன்.

சட்: 1979ம் ஆண்டிலும் பார்க்க இப்ப ஞாபகசக்திகூட இருக்கிறதா?-போகப்போகக் கூடஇருக்கும் அப்போது அதிர்ச்சியினுலும், உடல் வருத்தத்தினுலும் ஞாபகசக்தி இருக்கவில்லே. இப்ப வருத்தம் மாறிவிட்டதால் ஞாபகசக்தி இருக்கிறது.

சட்: பொலிஸ் வாக்கு மூலத்தில் எல்லாவற்றையும் கூறவில்லே?-விளக்கமாக கூறவில்லே, சுருக்கமாகக் கூறினேன்.

சட்: பொலிஸ் வாக்கு மூலத்தில் 2ம் எதிரி தகாத வார்த்தைகளால் பேசினுர் என்று நீர் ஒருவார்த்தைகூடக் கூறவில்லே?-மறந்திருக்கலாம்.

சட்: 1ம் எதிரி டிக்கட்டை வீசினுர்?-ஆம்.

சட்: பின்பு உம்மை அடித்தார்?-ஆம்.

சட்: 1ம் எதிரி டிக்கட்டை வீசியதாக, ஒருவார்த்தையும் நீர் பொலிஸுக்கு கூறவில்லே?- கூறினேன்.

சட்: டிக்கட்டை வீசியதாகவும், 1ம் எதிரி, 2ம் தடவை அடித்ததாகவும், பொலிஸாருக்கு கூறினீரா?-ஆம்.

சட்: நீர் அப்படி ஒருவார்த்தையும் கூறவில்லே?-சொல்லியிருக்கிறேன்.

சட்: எப்படி சொன்னீர்?- டிக்கட்டை கொடுத்தேன். பார்த்துவிட்டு வீசினுர் என பொலிஸ் வாக்குமூலத்தில் கூறினேன்.

சட்: 1ம் எதிரி சேட் கொலரிலும், 2ம் எதிரி பெல்டிலும், பிடித்து இழுத்து சென்ருர்கள்?-ஆம்.

சட்: யார் தள்ளியது?- 1ம் எதிரி மேல்விசாரணை நவம்பர் 18ம் தேதிக்கு ஒத்திப்போடப்பட்டது. (க)


அஸ்ரன் இன்ஸ்ரிரியூட்

English Department

பின்வரும் பாடநெறிகள் 15-10-83ல்

மீண்டும் ஆரம்பம்

1. INTEGRATED SPECIAL ENGLISH
2. TOEFL COURSE
3. SPOKEN ENGLISH
4. A. L. ENGLISH LITERATURE
5. O. L. REVISION ENGLISH

ஆசிரியர்கள்:
திரு. T. N. பஞ்சாட்சரம்
திரு. R. S. நாயகம்

★ இலவச பாடக் குறிப்புகள்

விபரங்களுக்கு:-

ASTAN INSTITUTE
166/1, Hospital Road Jaffna.


## நெடுந்தீவு சுய உதவித் திட்ட வீடுகள்

(நெடுந்தீவு)

நெடுந்தீவில் சுய உதவித்திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட 30 வீடுகளும் பூர்த்தியடையும் நிலையில் உள்ளன. சில வீடுகளில் உரிமையாளர்கள் குடியிருப்பதற்கான ஏற்பாடுகளே மேற்கொண்டு வருகின்றனர். (அ)

## 16,000ரூபாவை பறிகொடுத்த வயோதிப மாது!

(யாழ்ப்பாணம்)

வெளிநாட்டிலிருந்து மகன் அனுப்பிவைத்த பணத்தை வங்கியில் மாற்றிச் சென்ற வயோதிபமாது பணத்தைப் பறிகொடுத்து வெறுங்கையுடன் வீடு சென்ருர்.

உரும்பராய் வடக்கைச் சேர்ந்த புவனேஸ்வரி கனகரத்தினம் (62 வயது) என்பவரே இப்பரிதாப நிலேக்குள்ளானுர்.

இவர் நேற்று முன்தினம் காலே வெளிநாட்டிலிருந்து தமது காசோலேயை யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிவீதியிலுள்ள இலங்கை வங்கியில் மாற்றி 17 ஆயிரம் ரூபா பெற்று தமது கைப்பையில் வைத்த பின்னர் வர்த்தகஸ்தாபனம் ஒன்றுக்குச் சென்று 1000 ரூபாவுக்கு பொருட்கள் வாங்கினுராம் அங்கிருந்து வெளியில்வந்து நின்ற சிறிது நேரத்தில் தமது கைப்பையைத் திறந்து பார்த்த பொழுது மீதிப்பணம் மாயமாக மறைந்து விட்டதைக் கண்டாராம்.

இந்த வயோதிபமாது அழுத கண்ணீருடன் யாழ்.பொலிஸ் நிலேயத்துக்குச் சென்று தனக்கேற்பட்ட நிலேயை எடுத்துச் சொன்னுர்.


வெளிநாடு செல்வதற்கு

★ விமான டிக்கட்
★ அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் காசோலே(வங்கியின் கட்டணத்தில்)
★ விமான ஆசனப் பதிவுகள்

மற்றும் உங்கள் சகல பிரயாண தேவைகளுக்கும்

(Passport, Visa எந்த ஒரு நாட்டுக்கும் எடுத்துக்கொடுக்கப்படமாட்டாது இதுசம்பந்தமான படிவங்களும் (Application Forms) எம்மிடம் இல்லே)

இன்றே நாடுங்கள்

மக்கிரேன் டிரவல்ஸ் லிமிட்.

8, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
(Zambian Airways பிரதான விற்பனேப் பிரதிநிதி)
GENERAL SALES AGENTS
த. பெ. எண்: 92 போன்: 24154



அரிய சந்தர்ப்பம்

Computer Programming BASIC-COBOL

Computer மொழிகளில் கூடிய நேர செய்முறைப் பயிற்சியளிக்கப்படும்.

● T. V. ● வீடியோ டெக் றிப்பியறிங் ● எலக்றிக்கல் வயறிங்
● Hotel Management ● வெல்டிங் ● எயர்கொண்டிசனிங்

SPOKEN ENGLISH, FRENCH

புதிய பயிற்சிகள் ஆரம்பம் : 20-10-83

The School of Computer Studies

52/1, கனகரத்தினம் கட்டிடம்,
ஸ்ரான்லி வீதி, -- யாழ்ப்பாணம்.

**லதா** (கோண்டாவில்)
தினசரி 6-30, 9-45
சனி, ஞாயிறு 2-30
எம்.ஜி.ஆர்- சரோஜாதேவி
**பெற்றால்தான் பிள்ளையா?**

**ராணி** (யாழ். நகர்)
10-30, 2-30, 6-15
கமலஹாசன்- அம்பிகா
**சகலகலா வல்லவன்**

**ஹரன்** (யாழ். நகர்)
காலை 10-30, 2-30, 6-30
சிவாஜி-சரிதா
ராதா-ராஜீவ் **துணை**
(கலர்)

**வின்ஸர்** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-00, 4-30, 7-00
Roger Moore in
**NORTH SEA HIJACK**

**ராஜா** [யாழ். நகர்]
10-30, 2-30, 6-00
பாக்கியராஜ்-அம்பிகா
கல்லாப்பட்டி சிங்காரம்
**அந்த 7 நாட்கள்**
[கலர்]

**மனோகரா**
(யாழ் நகர்)
தினசரி 10-30, 2-30, 6-15
சிவாஜி - பத்மினி
நாகேஷ்
**குலமா குணமா**
(புதிய பிரதி)

**லிடோ** (யாழ். நகர்)
தினசரி
10-30, 2-15, 6-30.
**விடியும்வரை காத்திரு**

**வெலிங்டன்**
(யாழ். நகர்)
தினசரி 10 30, 2.15, 4.45, 7.00
Clint Eastwood in
ESCAPE FROM
**Alcatraz**
(adults only)
(action film)

தடைசெய்யப்படுமா?
**றீகல்** (யாழ். நகர்)
Daily: 10-30 a.m., 2-30, 4-45, 7-00 p.m.
Christopher Walken in
**Dogs of War**
WAR FILM—COLOR
எந்த நேரமும் தடை செய்யப்படலாம்! ஆகவே இன்றே பார்ப்பது நன்றே

**சாந்தி** யாழ்நகர்
10.30, 2.15, 4.45, 7.00
The Comedy for Every one who's had it up to Here...
ROBERT HAYS Hasn't had this much fun since "AIR PLANE"!
**"Take This Job And Shove It"**
action - comedy - color
sex - adults only

## ஆனந்தன் ஓய்வு பெறுகிறார்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் உதவி உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரி திரு. ஜே. எஸ். எஸ். ஆனந்தன் இம்மாத இறுதியில் ஓய்வு பெறவிருக்கிறார். இவர் யாழ்ப்பாணத்தில் 12 வருட காலம் கடமையாற்றியுள்ளார். (க)

## பின்னுறுதிக் கட்டளை

மல்லாகம் மாவட்ட நீதிமன்றில்

குப்பிளான்ஏழாலையைச் சேர்ந்த காலஞ்சென்ற கதிரவேல் அன்னப்பிள்ளை என்பவரின் மரணசாதனமில்லா சொத்தினதும் உடமைப்பொருட்களினதும் விடயத்தில்.

மரணமெய்தியவர்

வழக்கு இலக்கம்:
தத்துவம் 85

பொன்னையா நடராசா
21/1, அன்னசத்திர ஒழுங்கை, கந்தர் மடம், யாழ்ப்பாணம்.

மனுதார்

எதிர்

1. விஸ்வலிங்கம் கைம்பெண் சிவபாக்கியம்
2. பொன்னையா ஐயம்பிள்ளை
3. விஸ்வலிங்கம் சோமசேகரம்
4. விஸ்வலிங்கம் அருளானந்தம்
5. நாகலிங்கம் கதிரமலையாபேரும் குப்பிளான், ஏழாலை.

எதிர் மனுதார்கள்

இவ்விடயம் 1981ம் ஆண்டு வைகாசி மாதம் 28ம் திகதி மல்லாகம் மாவட்ட நீதிபதி சி. வி. விக்கினேஸ்வரன் அவர்கள் முன்னிலையில் மனுதார் சார்பில் சட்டத்தரணி திரு. கா. ஜெகநாதன் சமூகத்தில் எடுத்துக்கொள்ளப்பட்ட போது மனுதரின்30/12/1980ந் திகதி கொண்ட மனு சத்தியக் கூற்று ஆகியவை வாசிக்கப் பெற்று,

மேற்கூறிய எதிர்மனுதார்களோ அல்லது அக்கறையுள்ள வேறு ஆள் எவரேனும் இந்நீதிமன்றில் 1983ம் ஆண்டு கார்த்திகை மாதம் 30ம் திகதியன்று காலை 9-00 மணிக்கு அல்லது அதற்கு முன் நீதிமன்றினைத் திருப்திப்படுத்தக்கூடிய எதிர்க்காரணம் காட்டினாலன்றி மேற்கூறிய மனுதார், இறந்தவரின் வாரிசு என்ற முறையில், மேற்கூறிய சொத்துக்களை நிருவகிப்பதற்கு நிர்வாகப் பத்திரங்களைப் பெற உரித்துடையவர் என இத்தால் கட்டளையிடப்படுகின்றது.

1983ம் ஆண்டு புரட்டாதி மாதம் 28ம் திகதியாகிய இன்று,

மாவட்ட நீதிபதி.

**கா. ஜெகநாதன்,**
மனுதாரின் சட்டத்தரணி.
9218

**ஸ்ரீதர்** (யாழ். நகர்)
10-30, 2-00, 4-30, 6-45
Last 3 days
Bruce Lee in
**ENTER THE DRAGON**
Limited Engagement
For the last time in Jaffna
புரூஸ் லீ நடித்த
எண்டர் த ட்ரகன்
சில தினங்கள் மட்டும்
யாழ். நகரில் கடைசி தடவையாகத் திரையிடப் படுகிறது.
Next :
IT COULD HAPPEN TO YOU
(A Film on V. D.)

'தந்தை செல்வா'

## தொடக்கநிலைப் பள்ளி நிர்வாகிகள்

(தெல்லிப்பழை)

தெல்லிப்பழை 'தந்தை செல்வா தொடக்க நிலைப் பள்ளி' அபிவிருத்திச் சங்கக் கூட்டத்தில் பின்வருவோர் நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு க சிவநேசன் (பாடசாலை அதிபர்) செயலாளர் திரு க.சிவானந்தம் (தெல்லிப்பழை அரசினர் ஆஸ்பத்திரி), பொருளாளர் ஆசிரியை திருமதி நே.செல்லத்துரை. செயற்குழு உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

பாடசாலையில் மின்இணைப்பு வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருப்பதால், மாணவர்கள் குடிநீர்பெறுவதற்கு வேண்டிய வேலைகளை மேற்கொள்வதாகவும் இக்கூட்டத்தில்முடிவு செய்யப்பட்டது.

(மா)

**தேங்காய் விற்பனை**
பளை தர்மக்கேணித் தோட்டத்தில் சுமார் 28,000 தேங்காய்கள் விற்பனைக்குண்டு. தேவையானோர் ரூபா. 50/-கட்டுப்பணத்துடன், ''பொது முகாமையாளர்''
தென்னை பயிர்ச் செய்கைச்சபை,
த. பெ. இல. 1388 கொழும்பு-1 என்ற விலாசத்திற்கு 18-10-83க்கு முன் அறியத்தரவும்.
அத்தியட்சகர்
தெ. ப. சபை,
பளை.
9277

**Jaffna College Technical Institute**
Welding Technology-six months Craft course and intensive training on Welding Technology is commencing on 1st November, 1983.
Apply before 29th October 1983.
Fees Rs. 500/- and deposit 1,000/-
Director
JAFFNA COLLEGE TECHNICAL INSTITUTE
Vaddukoddai. 9280

**வெல்டிங் — WELDING**
ஆறு (6) மாத வெல்டிங் பயிற்சி வகுப்புகள்
நவம்பர் 1-ம் திகதி ஆரம்பமாகிறது.
கட்டணம் 500/- வைப்புப்பணம் 1,000/-
எமது அலுவலகத்தில் கிடைக்கும் விண்ணப்பப்படிவத்தில்
29-10 83க்கு முன் விண்ணப்பிக்கவும்.
DIRECTOR,
**Jaffna College Technical Institute**
VADDUKODDAI. (9281)

**உடன் தேவை**
பூட்டுக்கள் செய்வதில் அனுபவம் உள்ளவர்களும்
**GAS** வெல்டிங் திறமையாகச் செய்யக்கூடியவர்களும்
உடனே தேவை.
விண்ணப்பிக்கவும்.
**டைனமிக் என்ஜினியரிங் லிமிற்றெட்**
காங்கேசன்துறை வீதி, தெல்லிப்பளை.
(9236)

**சரவணையில்**
**கலாலய நடன வகுப்பு**
மேற்படி நடன வகுப்பு எதிர்வரும் விஜயதசமியன்று (16-10-83 ஞாயிறு) ஆரம்பமாகும். இந்தியாவில் கலாக்ஷேத்திராவில் டிப்ளோமா பட்டம் பெற்றுத் திரும்பிய செல்வி பத்மஜா சச்சிதானந்தசிவம் அவர்களால் ''தயாபவனம்'' சரவணையில் உள்ள அவரது இல்லத்தில் ஆரம்பிக்கப்படும். பயிற்சிபெற விரும்புவோர் தொடர்புகொள்ளவும்.
**தயாபவனம்** சரவணை, வேலணை. 9149

**இல்லங்கள் அழகுபெறும் மரத்தளபாட மாளிகை!**

- வெளிநாட்டுப் பாணியில் உள் நாட்டில் உருவாகும் உயரிய மரத்தளபாடங்களுக்கு
- இல்லத்தரசிகளின் இல்லங்கள் அழகுபெறும் நவீன மரத்தளபாடங்களுக்கு

நகரில் ஓர் நம்பகரமான ஸ்தாபனம்

**- ருஜாந்தி பேணீச்சர்ஸ் -**

காட்சி அறையில் கண்ணைக் கவரும் மரத்தளபாடங்களைப் பார்த்து வாங்கிட விரையுங்கள்

**ருஜாந்தி பேணீச்சர்ஸ்**
234/3, ஸ்ரான்லி வீதி,
(ஸ்ரீதர் சினிமா முன்பாக)
யாழ்ப்பாணம்.

## ஆடிக்கலவர-

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கள். உடைமைகளைச் சேதப் படுத்தினர்கள். இதனால் இறந்த மகள் கவலையுற்றிருந்தார்.

''நாங்கள் அகதிகளாக யாழ்ப்பாணம்வந்து உறவினர் வீட்டில் தங்கியிருந்தோம். போக்குவரத்துத் தடை காரணமாக ஓமானிலிருந்த அவரின் கணவரிடமிருந்து கடந்த சில மாதங்களாகக் கடிதங்கள் கிடைக்கவில்லை. இதனால் மகள் மேலும் மனமுடைந்திருந்தார்.

''நேற்றுப் பகல் மகள் சந்தோஷமாக இருந்தார். நான் இரவு 8 மணிக்கு சாப்பிட்டு விட்டுப் படுத்துவிட்டேன். மகள் மற்றவர்களுடன் சிரித்துக் கதைத்துக்கொண்டிருந்தார்.

''நள்ளிரவு ஒரு மணிக்கு 'மாலா மாலா' என்று சத்தம் கேட்டது. என் அம்மாவும் சகோதரரும் சத்தம் போட்டார்கள் நான் அப்பக்கம் போனேன். மலகூடத்திற்கு அருகில் மகள் எரிந்து கருகிய நிலையில் கிடந்தார். நான் போகும்போது மற்றவர்கள் தண்ணீர் ஊற்றிக் கொண்டிருந்தார்கள். அவரை மலகூடத்திற்கு வெளியில் எடுத்துவிட்டார்கள். நான் எரிந்ததைக் காணவில்லை. அயலவர்களும் அங்கு கூடியிருந்தார்கள்.

''என் தம்பி நவரத்தினராசா இச்சம்பவம்பற்றிப் பொலிசாருக்குத் தகவல் கொடுத்தார். அவ்விடத்தில் மண்ணெண்ணைத் தகரம் ஒன்றும் காணப்பட்டது. எவர்மீதும் சந்தேகமில்லை.''

இறந்தவரின் சகோதரனும் சாட்சியமளித்தார். பொலிஸ் கான்ஸ்டபிள் எஸ். சிவலிங்கம் சாட்சிகளை ஆஜர்செய்தார்.

மரண விசாரணை அதிகாரி பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்டு விசாரணையை ஒத்தி வைத்தார். (க)

## யாழ்.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்ந்து யாழ். பிரதம தபால் அலுவலகம் நேற்றுக் காலை 10-30 வரை மூடப்பட்டிருந்தது. பின்னர் தபால் அலுவலகத்தின் முன்பக்கத்தில் ஒரு வாசல் கதவு மாத்திரம திறக்கப்பட்டிருந்தது. உள்ளேயும், வெளியேயும் ஓய்வூதியம் பெறவந்த பலர் காத்திருந்தனர்.

நேற்று முன்தினம் இரவு யாழ். தபால் அலுவலகத்தில், வங்கிகளில்லாத பகுதிகளிலுள்ள தபால்நிலையங்களுக்கு அனுப்பிவைப்பதற்கான ஓய்வூதியப்பணம் பொதிகளில் கட்டி, சீல்பண்ணப்பட்டு, அறையில் வைக்கப்பட்டிருந்தது. இக்களஞ்சிய அறை பூட்டப்பட்டிருந்தது.

மேற்பார்வையாளர், விகிதர்கள் உட்பட 14ஊழியர்கள் சுறுசுறுப்பாகக் கடமையில் ஈடுபட்டுக்கொண்டிருந்தார்கள்.

அதிகாலை 4-00 மணியளவில் அலுவலகத்தின் முன் கவுண்டர் ஒற்றைக்கதவு திறக்கப்பட்டிருந்தது. இக கதவினூடாக சென்ற நானகு வாலிபர்கள் துப்பாக்கி, கைத்துப்பாக்கிசகிதம் கவுண்டர் மேலால் பாய்ந்து தபால் தரம் பிரிக்கும்அறைக்குள் புகுந்தார்கள். இவர்களில் மூவர் முகமூடி அணிந்திருந்தார்கள்.

அங்கு கடமையாற்றிக் கொண்டிருந்த ஊழியர்களை நோக்கிய ஒரு வாலிபர் மேற்பார்வையாளர் எங்கே என்று கேட்டார்.

இதற்கிடையில் திறந்திருந்த அறைகள், கவுண்டரில் உள்ள தொலைபேசிகளின் தொடர்புகளைத் கொள்ளையர் துண்டித்துவிட்டார்கள். அப்பொழுது மின்சார வெளிச்சம் இருந்தது.

### 14 ஊழியர்கள் பூட்டப்பட்டனர்

மேற்பார்வையாளரை அழைத்துவந்த துப்பாக்கிஇளைஞர்கள் களஞ்சிய அறையைத் திறக்கும்படி சொன்னார்கள்.

### கொள்ளை நடந்த விதம்

களஞ்சிய அறை திறக்கப்பட்டதும், வேறொரு அறையினுள் 14 ஊழியர்களையும் வைத்துப் பூட்டிவிட்டனர். பின்னர் களஞ்சிய அறையிலிருந்த 14 தபால் பொதிகளையும் கத்திகளினால் கிழித்து எல்லாமாக 2லட்சத்து 90 ஆயிரத்து 160 ரூபா 46 சதம் கொள்ளை அடித்துச் சென்றனர்.

அவர்கள் போகும்பொழுது தங்களுக்குத் தேவைப்படுவதாகச் சொல்லிக் கொண்டு, துண்டிக்கப்பட்ட 3 தொலைபேசிக் கருவிகளையும் எடுத்துச் சென்றார்களாம்!

இத்தொகையான பணத்தை எப்படிக் கொண்டுசென்றார்கள் என்பதுபற்றித் தெரியவில்லை.

யாழ். பொலிஸார் இக்கொள்ளை தொடர்பாகத் தீவிர விசாரணையில் ஈடுபட்டுள்ளனர்.

### ரூபா 1 லட்சம் சன்மானம்

இக்கொள்ளை தொடர்பாக தகவல் தருவோருக்கு 1 லட்ச ரூபா சன்மானம வழங்கப்படும் என்று பொலிஸ் திணைக்களம் தெரிவிததுள்ளது. (அ)

## தொண்டமான்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கள் குறித்து பேச்சுவார்த்தை நடத்தினர்.

முதல்வரின் அலுவலகத்தில் ஒரு மணி நேரம் இடம்பெற்ற இப்பேச்சுவார்த்தைகளின் போது இ. தொ. கா. பொதுச் செயலாளர் திரு. எம். எஸ். செல்லச்சாமியும் கலந்து கொண்டார். (கு)

## கூட்டணிக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பல வருடங்களுககு முன்னர் தெரிவிக்கப்பட்ட குற்றச்சாட்டுக்களை தற்போது கூறி எமமை சிறையில் தள்ள நடவடிக்கை எடுக்கப்படுகிறது'' என்றும் திரு. அமிர்தலிங்கம் கூறினர். (கு)

## கோஷ்டி....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ரும் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மாணிக்கவாசகரின் சடலம் யாழ். ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டுள்ளது. மரணவிசாரணை இன்று நடைபெறும். (ம)

## கைதான..:.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ரையும் கைதுசெய்துள்ளனர்.

திரு. பகீதரனின் மைத்துனரான திரு. வள்ளுவன் இராசலிங்கம் என்ற இவ் வாலிபர் இலங்கைவானொலிக்குஅளித்த பேட்டியில் அக் கடிதத்தை முழுமையாக வாசித்துக்காட்டினர்.

கூட்டணியின் அதிகாரசபை உறுப்பினரான திரு. மாவை சேனாதிராசாவுக்கு எழுதப்பட்டதாக கூறப்பட்ட இக் கடிதத்தில், தமிழ்தேசிய இராணுவம் என்ற பெயரில் புதிய அமைப்பு ஒன்றை ஆரம்பித்துள்ளதாகவும் வவனியா புலேந்திரனின்கொலைக்கு இவ் வியக்கமே பொறுப்பு என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது.

இயக்கத்துக்கென தமிழ் நாட்டில் 'எஸ்டேற்' ஒன்றை வாங்கியிருப்பதாகவும் திரு. மாவைசேனாதிராசாவை தமிழகத்துக்கு வந்து இயக்கத்துக்கு வழிகாட்டுமாறும் கேட்கப்பட்டிருந்தது. (கு)

## சுவரொட்டி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இடம்பெயர்ந்த பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தால் எழுதப்பட்ட சுவரொட்டிகளை ஒட்டிக்கொண்டிருந்தபோது ரோந்து சுற்றிவந்த ஆயுதப் படையினர் இவர்களைக் கைது செய்ததாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இதுசம்பந்தமாக பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம் உயர் அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டுள்ளது. (மா)

## 31ம் நாள் நினைவஞ்சலி

### கந்தையா கலியுகநாதன்

(பட்டயக் கணக்காளர் இறுதியாண்டு மாணவன்)

மலர்வு : 18-12-53

உதிர்வு : 14-9-83



தனக்கென வாழாது பிறர்க்கென வாழ்ந்து
எங்களை எல்லாம் மீளாத்துயரில ஆழ்த்தி
இறைவனடி எய்திய உமது ஆத்மா
சாந்தியடையப் பிரார்த்திக்கும்

''சிறிகந்தவாசா'',
கலாசாலை வீதி,
திருநெல்வேலி வடக்கு,
யாழ்ப்பாணம்.
(9307)

அன்புத் தாய்,
சகோதர, சகோதரிகள்,
மைத்துன, மைத்துனிகள்,
மருமக்கள், உறவினர்கள்,
நண்பர்கள்.

## மரண அறிவித்தல்

### திருமதி மங்களாம்பிகை நடராஜா

நவாலி முதலியார் வை. மகேசன் - காலஞ்சென்ற திருமதி பொன்மணி மகேசன் ஆகியோரின் அன்பு மகளும், சி.நடராஜாவின் அன்புமனைவியும், கணேசன், நடேசன், புவனேந்திரன், லலிதாம்பிகை, கணேசு, காலஞ்சென்ற வரதராஜன் ஆகியோரின் அன்புச் சகோதரியுமாகிய மங்களாம்பிகை காலமாகிவிட்டார். அன்னாரின் ஈமக்கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சனிக்கிழமை (15-10-83) காலை 8-00 மணியளவில் எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

''லிங்க வாசா'', நவாலி. தகவல்: முதலியார் வை. மகேசன்

9304

## மரண அறிவித்தல்

### பொன்னுச்சாமி சின்னராசா

ஆனைப்பந்தியைச் சேர்ந்த பொன்னுச்சாமி மில்ஸ் உரிமையாளரான பொன்னுச்சாமி சின்னராசா 1-10-83ல் காலமானார். அன்னார் தனேஸ்வரியின் அன்புக்கணவரும் சண்முகதாஸ் (யாழ்.மத்தியகல்லூரி உயர்தரவகுப்பு), சிவசௌரி (வேம்படி மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும், இராசரெட்னம், திருமதி மங்கயர்க்கரசி சண்முகசுந்தரம் ஆகியோரின் சகோதரருமாவார் அன்னாரின் ஈமககிரியைகள் இன்று (14-10-83) பி. ப. 4 மணியளவில் 299, நாவலர் வீதியில் உள்ள அன்னாரின் இல்லத்திலிருந்து தகனக் கிரியைக்காக கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் தயவுசெய்து ஏற்றுக்கொள்ளவும். 9300


# ஹோம் பினன்ஸ் லிமிட்.

## தினசரி காலை மாலை லக்சறி பஸ் சேவிஸ்

## அத்துடன் புத்தம் புதிய மினிபஸ் சேவிஸ்

டிக்கட் பெறுமிடங்கள்:

1. ஹோம் பினன்ஸ் லிமிட். 82, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 24310
2. யாழ். மெற்றல் சேல்ஸ் சென்ரர் 6, நியூ மார்க்கட், யாழ்ப்பாணம். தொலைபேசி: 23596
3. யாழ். ஐக்கிய வியாபாரச் சங்கம் 420, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 22537, 22370


இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1983-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 14-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka. under number B 100236/81. Eelanadu-P. O. Box, 49, Telegram, Eelanadu, Telephone, 22389—24126.